வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க்வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 கார்த்திகை திங்கள் 5ம் நாள் (20—11—60) ஞாயிற்றுக்கிழமை ஐ. அவ். 30 | இதழ் 25

# தமிழ்ப் பகுதிகளிலும் ஸ்டேஷன் மாஸ்டர்கள் இனிச் சிங்களவர்கள்தான்?

## முறையான பழைய மாற்றங்கள் ரத்தாகும்— புதியவை விரைவில் பிறந்து அமுலாகும்!

### ஸ்டேஷன் மாஸ்டர்கள் சங்கக் கோரிக்கையின் எதிரொலி: தமிழர்கள் கூட்டாக ராஜினுமா

(சுதந்திரன் நிருபர்)

தமிழ் பகுதிகளிலும் இனித் தமிழ் ஸ்டேஷன் மாஸ்டர்களுக்குப் பதிலாகச் சிங்கள ஸ்டேஷன் மாஸ்டர்களே நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது. ஸ்டேஷன் மாஸ்டர்கள் சங்கம் அணிமையில் ரயில்வே ஜெனரல் மனேஜரைப் பேட்டி கண்டு கேட்டுக்கொண்டதன் விளைவாக இப்படியான மாற்றம் நடைபெறலாம் என்று நம்புவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஸ்டேஷன் மாஸ்டர்கள் சங்கப் பிரதிநிதிகள் சமீபத்தில் ரயில்வே ஜெனரல் மனேஜரைப் பேட்டி கண்டபோது, இலங்கையில் உள்ள எல்லா ரயில் நிலையங்களிலும், அதாவது தமிழ்ப் பகுதிகளில் உள்ளவற்றிலும் கூட, சிங்களத்திலேயே கருமமாற்றக்கூடிய ஸ்டேஷன் மாஸ்டர்களையும் உதவி ஸ்டேஷன் மாஸ்டர்களையும் மற்றும் உயர்தர அதிகாரிகளையும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாந் தேதிவரை பொறுத்திருக்க முடியாது என்றும் தனிச் சிங்களச் சட்டம் பூரணமாக அமுல் செய்யப்படுவது உடனடியாகவே நடந்தாக வேண்டும் என்றும் சங்கம் வற்புறுத்தியது.

#### உடனடியாகவே எங்கும் சிங்களம்

உடனடியாகச் சிங்களத்தில் எல்லா ரயில் நிலையங்களிலும் அலுவல்கள் செய்யும்பொருட்டு சிங்களம் தெரிந்த ஸ்டேஷன் மாஸ்டர்களையும் உதவி ஸ்டேஷன் மாஸ்டர்களையும் மற்றும் ஆபீஸர்களையும் தீவெங்குமுள்ள எல்லா ரயில் நிலையங்களுக்கும் அனுப்ப வேண்டும் என்றும் சங்கம் கேட்டுக்கொண்டது. முன்னர் அரசாங்க சேவைச் சட்ட விதிப்படி செய்த மாற்றங்களை—அவற்றிற்கான கட்டளைகளை ரத்துச் செய்துவிட்டு புதிய மாற்ற உத்தரவுகளைப் போட வேண்டும் என்றும் ஸ்டேஷன் மாஸ்டர்கள் சங்கம் ரயில்வே ஜெனரல் மனேஜருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. சங்கத்தின் வேண்டுகோள் அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்கம் அதைக் கரிசனையோடு ஏற்று அனுதாபத்துடன் கவனித்து வருவதாகவும் தெரிகிறது.

#### கூட்டத் தீர்மானம்

மேலே குறிப்பிட்ட பேட்டிக்கு முன்னர் அதாவது இம்மாதம் பத்தாந் தேதி சங்கத்தின் நிர்வாகக் குழு விசேஷ கூட்டம் ஒன்றைக் கூட்டி சில தீர்மானங்களை நிறைவேற்றியது. அவற்றுள் ஒன்று 1-1-1961வரை பொறுத்திராமல் உடனடியாகவே சிங்களம் தெரிந்த ஸ்டேஷன் மாஸ்டர்களையும் உதவி ஸ்டேஷன் மாஸ்டர்களையும் சிங்களத்தில் கருமமாற்ற அனுமதிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதாகும். மற்றொரு தீர்மானத்தில் ரயில்வே சட்டப் புத்தகங்கள், பாரங்கள் முதலானவையெல்லாம் விரைவில் சிங்களத்தில் மொழிபெயர்த்துத் தயாரிக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது.

#### தமிழர்கள் ராஜினுமா

ஸ்டேஷன் மாஸ்டர்கள் சங்கத்தின் இப்படியான 'தீவிர போக்குக் காரண

(9ம் பக்கம் பாாக்க)

# திருமலை 'நிக்கல்சன் லொட்ஜ்'

## அதை பௌத்த மண்டலயவுக்கு கையளிக்க அரசினர் உத்தேசம்

### ஊர் மக்கள் கடும் எதிர்ப்பு

(சுதந்திரன் நிருபர்)

திருமலையில் உள்ள நிக்கல்சன் லொட்ஜ் (Nicholson Lodge) என்ற பழம் பெரும் கட்டடத்தை அரசாங்கம் பௌதத மண்டலய என்ற சிஙகள ஸ்தாபனத்துக்கு கொடுக்கப்போகிறது என்ற செய்தி திருமலை வாசிகளைக் குமுற வைத்திருக்கிறது. அரசாங்கத்தின் இந்த உத்தேச நடவடிககையை அவர்கள் பலமாக எதிர்க்கிறார்கள்.

நிக்கலிசன் லொட்ஜ் கோட்டைக்குச் செல்லும் வழியில் கடற்கரைக்கு அணித்தாய் உள்ளது. முன்பு பிரிட்டிஷ் கடற் படைத்தளத்துக்கு சொந்தமாய் இருந்த இக்கட்டடம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மாவட்ட அதிகாரியின் பொறுப்பில் சும்மா கிடக்கிறது.

திருமலையில் உள்ள மூன்று சாரார் இந்தக் கட்டடத்தைத் தமக்குத் தரும்படி கேட்டார்கள். திரு என். ஆர். இராசவரோதயத்தின் ஆதரவோடு, மத்திய கல்லூரிக்காக அந்தக் கட்டடத்தைத் தரும்படி கிழக்கு மாகாணக் கல்வி அதிகாரி கேட்டார். கொடுக்கப்படவில்லை.

திருமலை மாவட்ட அதிபர் தமது பொறுப்பில் உள்ள அந்தக் கட்டடதில் இளைஞர் இல்லம் (Youth Centre) நடத்தப்போவதாக அறிவித்தார். "கூடாது; நடத்தாதே" என்று தடை; நடைபெறவில்லை.

திருமலை அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கம், விவாகமாகாத அரசாங்க ஊழியர்கள் குடியிருக்கும் விடுதியாகப் பாவிப்பதற்கு அந்தக் கட்டடத்தைத் தரும்படி ஆதிமூலமான அரசாங்க திறைசேரியைக் கேட்டது. கிடைக்கவில்லை.

இப்படி மூன்று சாராரும் கேட்டு ஏமாற்றம் அடைந்திருக்கும் நிலையில் கட்டடத்தை பௌத்த மண்டலய என்ற ஸ்தாபனத்திடம் கையளிக்க அரசாங்கம் முடிவு செய்யவிருக்கிறது என்ற செய்தி திருமலையில் பரவி விட்டது. எல்லாரும் ஒருமுகமாக அரசாங்கத்தின் இந்த உத்தேச நடவடிக்கையை எதிர்க்கிறார்கள்.

# கத்தோலிக்கர் என்ருல் துவேஷமும் அலட்சியமும்!

## அரசாங்க அலுவலகங்களில் வளர்ந்துவரும் பயங்கர நிலைமை

(சுதந்திரன் நிருபர்)

கத்தோலிக்கர்கள் என்ருல் அவர்கள் அலட்சியப் படுத்தப்படுவதுடன் அவர்கள் மீது துவேஷமும் காட்டப் படும் அதிபயங்கர நிலைமை பெரும்பாலான அரசாங்க அலுவலகங்களில் வளர்ந்து வருவதாகத் தெரிகிறது.

கத்தோலிக்கர்களை இப்படிப் புறம்போக்காக மதிக்கும் நிலைமை உதவி பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கப்போவதாக அறிவித்த பின்னரே தோன்றியது. பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதைக் கத்தோலிக்கர்கள் தம்மாலான மட்டும் எதிர்த்தார்கள்—எதிர்க்கிருர்கள் — இன்னும் தொடர்ந்து எதிர்க்கப் போகிருர்கள் என்பது தெரிந்ததே இதன் காரணமாகவே அரசாங்கத்துக்குச் சார்பாக உள்ள பௌத்த மத உயர்தர உத்தியோகத்தர்களாலும் மற்றும் ஊழியர்களாலும் கத்தோலிக்கர்கள் அலட்சியப்படுததப்படுகிருர்கள்.

#### மந்திரியின் கேள்வி

கத்தோலிக்கர்கள் என்ருல் அவர்களோடு அமைச்சர்களே வேறுவிதமாகப் பேசவும் பழகவும் செய்கிருர்களாம். சமீபத்தில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தூது கோஷ்டி கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மஹ்மூதைப் பேட்டி கண்டதல்லவா? அப்போது தூது கோஷ்டியினர் "உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கும் போது அந்தப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் நிலைமை என்ன ஆகும்?" என்று கேட்டார்கள். அந்தக் கேள்விக்கு பதில் சொல்லு முன்னர் மந்திரி திருப்பி ஒரு கேள்வி கேட்டார்: உங்களில் கத்தோலிக்கர்கள் யாராவது இருக்கிறீர்களா?" —இதுதான் அவர் கேட்ட கேள்வி.

#### வணசிங்கா பதில்

"ஆமாம், நான் இருக்கிறேன், கத்தோலிக்கன்" என்று சங்கத்தின் உதவிச்

(8ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்லெட்ஸ்

ப்ளட் பியூரிபயர்

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து






● மூலம்

● வாதம்

● படை (ECZEMA)

● மாத விடாய்

கோளாறுகள்

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடைய வேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

68, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தை ஆளுபவரே எழுத்தாளர்—

## சும்மா எழுதுபவர் எழுத்தர்

## கொஞ்சும் சொற்கள் மலிந்த வளமிக்க மொழி தமிழ்

### இரா. நெடுஞ்செழியன் கருத்துரை

சென்னையில் அண்மையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் சங்க எட்டாவது, மாநாட்டில் திரு. இரா. நெடுஞ்செழியன் "தமிழ் இலக்கியம்" என்ற பொருள் பற்றி அரிய தோர் உரை நிகழ்த்தினர். அவ்வுரை இங்கு கட்டுரை வடிவில் தரப்படுகிறது.

எழுத்தாளர் என்றால் யார்? என்பதற்குப் பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனர் அவர்கள் சிறந்த முறையில் விளக்கம் தந்துள்ளார்கள். "எழுத்தை எழுதுவோரெல்லாம் எழுத்தாளர் அல்லர்; எழுத்தை ஆளுபவரே எழுத்தாளர் ஆவார்" என்று அவர் விளக்கிக் காட்டியுள்ளார்கள். எழுத்தாளர் என்னும் போது, எழுத்து என்பது எழுத்துக்களால் ஆகிய சொல்லையுணர்த்தி, சொற்களாலாகிய இலக்கியத்தையுணர்த்தி நிற்பதாகும். பதிவு அலுவலகங்களில் எழுத்துக்களைப் பதிவு செய்வோரோ, அல்லது கடைகளில் கணக்கு எழுதும் கணக்கரோ, அல்லது புகைவண்டி நிலையத்தில் காவ அட்டவணை எழுதும் அலுவலாளரோ எழுத்தாளர் ஆகமாட்டார்கள். அவர்கள் தாம் எழுதும்போது, தமது உணர்ச்சியையோ, எழுச்சியையோ, உள்ளக் கிடக்கையையோ, கற்பனைத் திறனையோ காட்டவேண்டிய அவசியமில்லை. அவர்கள் பொதுவாக எழுத்தர் ஆகத்தான் கருதப்படுவார்கள். ஆனால் எழுத்தாளர் என்போர், தமது உணர்ச்சியையும் உள்ளக் கிடக்கையும், கற்பனைத் திறனையும் ஆண்டு கதை, கவிதை, காவியம், கட்டுரை போன்ற இலக்கியப் படைப்புக்களை உருவாக்கித் தருபவர்களாவார்கள். எழுத்தை ஆளும் தன்மை இத்தகையோரிடம் காணப்படுகிற காரணத்தால்தான் இவர்கள் எழுத்தாளர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

#### இலக்கியம் சொற்களின் களஞ்சியம்

மொழிவளப்பத்திற்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் எழுத்தாளரின் தொண்டு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். அழகிய—எளிய—இனிய—கருத்து மிக்க சொற்களை இலக்கியத்திலே கையாண்டு அவற்றை மொழி வழக்கத்திற்குப் பயன்படுமாறு செய்யும் திறனை எழுத்தாளர்கள் கொண்டிருக்கிறார்கள். எழுத்தாளர்களால் உருவாக்கப் பெறும் இலக்கியங்கள், சொற்களின் களஞ்சியங்களாக இருந்து, மொழி வளர்ச்சிக்குத் தேவையான சொற்களை எடுத்துக் கொள்வதற்குப் பயன் படுவனவாக இருக்கின்றன. இலக்கியம் மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துவரும் ஒரு பெரும் கருவியாகும்.

#### அறிவியலும் கலையியலும்

மனிதன், தன் உள்ளத்தில் உருவாக்கி வெளியிடும் கருத்துக்களை, உலகோர், இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். ஒரு பிரிவை அறிவியல் (Science) என்றும், மற்றொரு பிரிவை கலையியல் (Art) என்றும் கூறுகிறார்கள். அறிவால் அளக்கப்படுவதை 'அறிவியல்' என்றும், உணர்வால் அளக்கப்படுவதை 'கலையியல்' என்றும் பிரிக்கிறார்கள்.

#### அறிவியல் கூற்று

இந்த ஞாயிற்று மண்டலம் எப்படி இருக்கிறது என்று கேட்டால், ஞாயிறானது ஒரு நெருப்புப் பிழம்பு போல் இருந்து, தன்னைத் தானே சுற்றிக்கொள்கிறது; உலகத்திலிருந்து ஒன்பது கோடியே இருபது இலட்சம் கல் தொலைவில்உள்ளது; உலகத்தை விட பதின்மூன்று இலட்சம் மடங்கு பெரிதானது; உலகமானது ஞாயிற்றை முந்நூற்றியறுபத்தைந்தே கால் நாளில் ஒரு முறை சுற்றி வருகிறது; உலகமானது 24 ஆயிரம் மைல் சுற்றளவு கொண்டது. 8 ஆயிரம் மைல் குறுக்களவு கொண்டது என்று அறிவியலறிஞன் கூறுவான். கலையியற் புலவனைக் கேட்டால், செங்கதிரோன தன் செவ்விய கதிர்களால் இருளை விரட்டிக் கொண்டு, காலையில், கீழ்க்கடலில் தோன்றி, பிறகு வான வெளியில் உலாவி, மாலையில், மேலைக் கடலில்போய் மூழ்கி, மீண்டும் நிலவாக உருவெடுத்து வான வெளியில் வந்து மிதந்தான், என்று கூறுவான். அறிவியலறிஞன் அறிவிற்குப்பட்டதைக் கூறுவான்; கலையியற்புலவன் உணர்வுக்குப் பட்டதைக் கூறுவான்.

#### கலையின் தன்மை

அறிவியல் அறிஞன் அறிந்து கூறும் உண்மை நாட்டவராலும், எப்பொழுதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கும். இரண்டும் இரண்டும் நான்கு என்றால் அந்த முடிவை அமெரிக்காவும் ஏற்றுக்கொள்கிறது, ருஷ்யாவும் ஏற்றுக்கொள்கிறது, ஜப்பானும் ஏற்றுக் கொள்கிறது; மேலும் இந்த உண்மை எல்லாக் காலத்தாலும் ஏற்றுக்கொள்ளப் படுகிற ஒன்றாகும் ஆனால் கலையுணர்வு நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம், ஊருக்கு ஊர், காலத்திற்குக்காலம், ஆளுக்கு ஆள், ஒரே ஆளிடத்திலும் ஆண்டுக்கு ஆண்டு, மணிக்கு மணி, விநாடிக்கு விநாடி மாறிக் காணப்படத்தக்கதாகும். குளிர்ச்சியைப் பற்றி குளிர் நாட்டிலுள்ள புலவன் வெறுத்துப் பாடுவான்; வெப்பம் மிகுந்த நாட்டிலுள்ள புலவன் வரவேற்றுப் பாடுவான்; குளிர்ச்சியை முதியோர் வெறுப்பர்; இளைஞர் விரும்புவர். எனவே கலை என்பது அவரவர் உணர்ச்சிக்கும், உள்ளக் கிடக்கைக்கும்கற்பனைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப உருவெடுக்கும் ஒன்றாகும் என்பதை எவரும் அறிந்து கொள்ளலாம்.

#### இலக்கியக் கலைக்கே பெருமை

ஓவியக்கலை, சிற்பக்கலை, நாட்டியக்கலை, உடற்பயிற்சிக்கலை, போன்ற கலைகள் எல்லாவற்றையும் விட மிகச்சிறந்த கலையாக, உலகோர் போற்றிப் பாராட்டி வளர்த்துவரும் கலை இலக்கியக் கலையாகும். உலகம் இலக்கியக் கலைக்குக் கொடுத்த பெருமையையும், புகழையும் வேறு எந்தக் கலைக்கும் தரவில்லை. இலக்கியங்களை வளர்த்த பெரும் புலவர்களான தொல்காப்பியர், திருவள்ளுவர், ஔவையார், இளங்கோ, கம்பன், ஷேக்ஸ்பியர், மில்டன், வேட்ஸ்வொர்த், கோல்டுஸ்மித், வால்டேர், விக்தர் ஹூகோ, அலெக்ஸாண்டர் டூமாஸ், ஹோமர், தாந்தே, டால்ஸ்டாய், புஷ்கின், வால்மீகி, காளிதாஸ் போன்றவர்களை உலகம் நினைவில் வைத்துக் கொண்டிருப்பதைப்போல, மற்றக்கலைகளை வளர்த்தவர்களை அவ்வளவாக நினைவில் கொள்ளவில்லை. ஓவியக் கலைஞன் நீளம்—அகலம்—கனம் ஆகிய மூன்று அளவுகளை வைத்துக்கொண்டு உருவங்களை மட்டும் தன் சிற்பத்தில் காட்டுகிறான். ஆனால் இலக்கியப் புலவன் உருவங்களை மட்டுமல்லாமல், உருவங்களின் உள்ளத்திலே மறைந்து கிடக்கும் எண்ணங்களையும் நம் மனக் கண் முன் கொண்டு வந்து காட்டுகிறான். ஓவியன மல்லிகை மலரை மட்டுந்தான் காட்டுவான்; இலக்கியப் புலவன் மலரை மட்டுமல்லாமல் மலரின் மணத்தையும் உணர்த்துவான். ஓவியன் காதலன் காதலி ஆகியோரின் உருவத் தோற்றங்களை மட்டுந்தான் காட்டுவான். ஆனால் இலக்கியப் புலவன் அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதையும், காதலனுக்குக் கூறாமல் காதலி மறைத்தது என்ன என்பதையும் காதலன் விட்ட பெருமூச்சுக்கு என்ன பொருள் என்பதையும் நமக்கு உணர்த்துவான்.

கலை என்பது மனிதன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவதற்குப் பயன்படும் ஒரு பெரும் கருவியாகும். அந்தக் கலைக் கருவிகளில் மிகச் சிறந்த கருவியாகக் காட்சியளிப்பது இலக்கியக் கலைக் கருவியேயாகும்.

#### தமிழ் இலக்கியச் சிறப்பு

இலக்கியங்களைக் கொண்டிருக்கிற மொழிகள் பலவற்றுள்ளும் தலைசிறந்த மொழியாய் விளங்கும் சிலவற்றில் முக்கியமான ஒன்றாக விளங்குவது தமிழ் மொழியாகும். இன்றைய உலகில் புகழோடு விளங்கும் மொழிகள் பலவும் இலக்கியங்களைப் பெறுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ், இலக்கிய வளத்தோடு கொழித்த மொழியாகும். தமிழ் இலக்கியங்கள் தொன்மை வாய்ந்தவை—தூய்மையானவை—இனிமை பயப்பவை—எழில் மிக்கவை—உள்ளங் கவருபவை—எளிமை வாய்ந்தவை—இலக்கணக் கட்டுக் கோப்பு உடையவை—சொற் செறிவு மிக்கவை—பொருளாழம் கொண்டவை—பல்வேறு வகை அணிகள் மிக்கவை—அகம் என்றும் புறம் என்றும் உள்ளுறை உவமம் என்றும் சுட்டிக் காட்டப்படும் பல்வேறு தனித்தன்மைகள் கொண்டவை.

ஒரு மொழியின் வளப்பத்தை அந்த மொழியிலுள்ள அன்பையும், ஆதரவையும், இன்பத்தையும், மகிழ்ச்சியையும் காட்டும் சொற்களின் அளவைக் கொண்டுதான் அளவிட வேண்டும். அந்த வகையில் பார்த்தால் தமிழ் மொழி பிறமொழிகளைக் காட்டிலும் கொஞ்சுவதற்கான சொற்களை மிக ஏராளமாகக் கொண்டிருக்கிறது வெட்ட வெட்டக் கிடைக்கும் சுரங்கத் தங்கம்போல், தோண்டத் தோண்டக் கிடைக்கும் கிணற்று நீர் போல் தமிழில் கொஞ்சும் மொழிச் சொற்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. மானே, மயிலே, மடப்பிடியே, மாடப்புறாவே, மணியே, மரகதமே, மாணிக்கமே, மணிவிளக்கே, தேனே, தெள்ளமுதே தெவிட்டாத இன்சுவையே, கட்டிக் கரும்பே, கற்பகமே, கட்டமுதே, கண்மணியே, வைரமே, வைடூரியமே, அன்பே, அருளே, அறிவே, அரசே, ஆரமுதே, அஞ்சுகமே ஆண்டகையே, தங்கமே, தண்பொழிலே, தூண்டா மணிவிளக்கே, மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே என்று பலவாறாகக் குழந்தையையே, அல்லது காதலியையோ, அல்லது கற்பனைக் கடவுளையோ கொஞ்சிக் கொண்டே இருக்கலாம. இப்படிக் கொஞ்சும் சொற்களுக்குத் தமிழில் பஞ்சமே இல்லை. இன்பம் தரும், மகிழ்ச்சியூட்டும், பயன் தரும், நன்மை விளைவிக்கும் எந்த ஒரு சொல்லையும் வைத்துத் தமிழில் கொஞ்சலாம். இது ஒன்றே தமிழின் இனிமையையும், வளப்பத்தையும் தெள்ளத் தெளிவாக விளக்கும்.

(11-ம் பக்கம் பார்க்க)

---

விஷ ஜெந்துக்கள்

# அரணை காலால் சுரண்டி நாக்கால் நக்கிவிடும்

## இதுதான் அது கடிக்கும் முறை:

### வாயால் நுரைதள்ளும்—மயக்கம் வரும்

விஷ வைத்தியர்

**க. சிற்றம்பலம்**

ஆண்டவன் திருவிளையாடலின் அற்புதங்கள்: சிலந்தியின் வாழ்க்கையில் பெண் சிலந்தி நடனம் செய்யும். ஆண் சிலந்தி அதைப் பார்த்துக்கொண்டேயிருக்கும். தில்லைக் கூத்தனின் திருநடனம் போல ஆட்டம் அமோகமாக இருக்கும் ஆண் சிலந்தி இதைக் கவனித்துக்கொண்டேயிருந்து விட்டு, பின்னர் தான் நடனம் செய்ய ஆரம்பிக்கும்.

#### காகச்சிலந்தியின் வாழ்க்கை விசித்திரம்

பெண் சிலந்தி நடனத்தை நிறுத்தி விட்டு அவதானத்துடன் நடனத்தை இரசித்துக்கொண்டு மெல்ல, மெல்ல ஆண் சிலந்திக்குக் கிட்டச் சென்று அத்துடன் சல்லாபம் செய்யும் பொழுது. ஆண் சிலந்தியைப் பிடித்துத் தின்னப் பார்க்கும். சில அவயவங்களைக் கடித்தே தின்றுவிடும். சில ஆண் சிலந்திகள் ஓடித் தப்பிவிடும். சில பெண் சிலந்தியின் மோகத்தில் சிக்கி அவற்றின் நடனவாழ்க்கை மரண வாழ்க்கையாகி, [illegible] பின்னர் பெண் சிலந்தி கருக் கொண்டு குஞ்சு பொரிக்கும் இதுதான் காகச் சிலந்தியின் வாழ்க்கை விசித்திரமாகும்.

வீட்டுக்கூரைகள், சுவர்கள், செத்தைகள், குப்பை கூளங்களுள்ள இடங்கள், மரங்களின் பொந்துகள் முதலிய இடங்களில் இவை சீவிக்கும்

#### சிலந்திகளின் பகைவர்கள்

பறவைகள், மனிதர், புயற்காற்று, மழை வெள்ளம், பல்லிகள், உடும்புகள் ஆகிய இவைகள்மூலமும், தங்களைத் தாங்களே பிடித்துத் தின்றும் அழிகின்றன. கடவுளின் சிருஷ்டியில் அழிவுகள் அதிகமில்லையானால் நாம் வாழும் உலகம் முழுவதும் அவைகளின் தாண்டவ மயமாகி விடுமல்லவா?

விஷ ஜெந்துக்களின் சிருஷ்டியையும், இறைவன் படைப்பின் திருவிளையாட்டுக்களையும் சிந்தித்தால் மக்கள் தங்கள் வாழ்க்கையில் எத்தனையோ எதிரிகளிடம் தப்பி தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கின்றார்கள் என்று எண்ணும் பொழுது ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது. கடவுள் மனிதப் பிறவிக்கு எத்தனையோ திருவிளையாட்டுக்களையெல்லாம் காட்டித் தன்னையும் தனது மகிமையையும் நினைக்கச் செய்யும் வகைகளையும் மக்களுக்கு உணரச் செய்கின்றார்.

#### சாணை மணந்தான் காரணம்

சிலந்தியின் செயல்களையும், அவற்றின் விஷத்தன்மைகளையும் இதுவரை ஆராய்ந்தாம் இதனால் தாக்கப்பட்டவாகள் அமாவாசை, பௌர்ணமி, அட்டமி, நவமி, கிரகண நாட்களில் கால் கைகளில் குறட்டல் காண்பதையும், வலிப்புத் தோன்றுவதையும் கண்கூடாகக் காணக் கூடியதாக இருக்கும், ஒரு வயதுக்குள் உள்ள பிள்ளைகளைச் சிலந்தி வெகு விரைவில் தாக்கும். காரணம் "சாணை" மணத்தினால் அவைகள் அவர்களைத் தாக்குவதாக அறியக்கிடக்கின்றது. இதைத்தான் சிலர் கரணைக் கடி பூச்சி கடித்து விட்டதென்றும் என்னிடம் வருவதைப் பார்த்திருக்கின்றேன்.

(15ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ. கந்தையா, பொரளை

கே: வாலிபனுடைய மனம் எதைப் போன்றது?

ப: வாலுள்ளவற்றின் சேஷ்டையைப் போன்றது.

கே: வாழ்க்கை எத்தனை வகைப்படும்?

ப: இரண்டு வகைப்படும். எப்படி வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு அப்படி வாழ்வது ஒரு வகை. எப்படியும் வாழலாம் என்று முடிவு செய்து கொண்டு அப்படி வாழ்வது மற்றொருவகை.

ஃ

அ. பஞ்சாட்சரம், வட்டுக்கோட்டை

கே: இலங்கை வந்திருக்கும் 'சரஸ்வதி' ஆசிரியர் விஜய பாஸ்கரன் கொழும்பில் எங்கு தங்கியிருந்தார்?

ப: தினகரன் ஆசிரியர் திரு. கைலாசபதியோடு தங்கியிருந்தார் என்று தெரிய வருகிறது.

ஃ

வி. ஏ. தர்மலிங்கம், புதுக்காடு

கே: அண்மை, அணிமை, எல்லாரும், எல்லோரும்—இவற்றில் சரியான சொற்கள் எவை?

ப: அணிமை, எல்லாரும் —என்பன தாம் சரியான சொற்கள் என்று கூறுகிறார் நமது இலக்கண வாத்தியார். எது சரியானாலும் எது பிழையானாலும் இந்த ஆராய்ச்சியில் மண்டையை உடைத்துக்கொண்டு காலத்தைப் போக்க நான் தயாராயில்லை.

ஃ

அ. கொண்சி, கிரிலப்பனை

கே: கலை, கலை, கலை என்று உயிரையே விடுகிறாராமே சிரிப்பு நடிகர் சந்திரபாபு!

ப: அப்படிவேண்டாததற்கெல்லாம் உயிரை விடப் போய்த்தான் ஓரளவு சினிமாவுக்குள் நுழைந்தார் அவர். இப்போது கலை, கலையென்று கட்டிய மனைவியைக் கூட இன்னொருவனோடு சேர்த்து இங்கிலாந்து வரை கலைத்து விட்டாரே!

ஃ

இரா. கு. நடராசன், திம்பிரிகசாய

கே: இலங்கையிலுள்ள திராவிட இயக்கத்தின் பொதுச் செயலாளர் யார்?

ப: மூவர் உளர். இரா அதிமணி, இளஞ்செழியன், திருமதி வசந்தா அப்பாத்துரை. இவர்களில் யார் அசல், யார் நகல், என்பது அறிஞர் அண்ணாவுக்குக் கூடத் தெரியாதே!

ஃ

இ. ஜெயகாந்தன், வேலணை

கே: மாவலி கங்கையை வடக்கே திருப்பப் போவதாக ஒரு மந்திரியார் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டம் ஒன்றில் கூறினாரே, இது நடக்குமா?

ப: எங்கே நடக்கப் போகிறது? எதையாவது ஒன்றைத் திருப்பி விடுவதாகச் சொல்லி யாழ்ப்பாணத்து மக்களின் புலனை வேறு விஷயத்தில் திருப்பிவிட்டு விட்டுத் தனிச் சிங்களப் பிரவாகத்தை வடக்கு கிழக்கு மாகாணங்களுள் வாய்க்கால் வெட்டித் திருப்பி விடுவது தானே இன்றைய அரசாங்கத்தின் அந்தரங்க "நீர்ப்பாசனத் திட்டம்" என்று தெரிகிறது!

ஃ

எஸ். பாலா, கொட்டடி

கே: குயுக்தியாரே, நீவிர் அடுத்த வீட்டுப் பெண்ணைப் பார்த்து விட்டீரா?

ப: அடுத்த வீட்டுப் பெண்ணை நான் சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பே எட்டிப் பார்த்து விட்டேன்! அதன் பயனாக இன்று, என்னையும் அவளையும் விட மேலும் மூன்று வயிறுகளுக்கு ஆகாரம் தேட வேண்டியவனாகி விட்டேனே!

சி. இராசநாயகன், திருமலை

கே: என்னுடைய நாய்க்குட்டி வண்டி வைக்கிறது. என்ன செய்யலாம்?

ப: பரவாயில்லையே! உம்முடைய நாய் கூட வண்டி வைக்கிறதா? நான் காரியாலயத்துக்குப் போவதற்கு வண்டிவைக்க முடியாமல் பொடி நடையில் செல்கிறேன் உம்முடைய நாயே வண்டி வைத்துவிட்டது. திருமலையின் பொருளாதார பலம் இவ்வளவு உயர்ந்துவிட்டதே.

ஃ

மு பரமசிவம், திருகோணமலை.

கே: தங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்?

ப: எத்தனையோ பேரை எனக்குப் பிடிக்கும். ஆனால் என்னைப் பிடித்தவர்கள் இருவர். தமிழில் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி, ஆங்கிலத்தில் சமசெற் மோம்.

ஃ

க. தருமேந்திரன், கொக்குவில்.

கே: குயுக்தியாரே, தாங்கள் ஒரு சிங்களவராகப் பிறந்து இலங்கையின் பிரதம மந்திரியானால், தமிழர்களின் உரிமைகளை அளிப்பீர்களா?

ப: சாதாரணமாக அளிக்க மாட்டேன். சிங்களவருக்கு நன்மை பயக்கக்கூடிய அதிகாரம் ஒரு சிங்களப் பிரதம மந்திரியின் கையில் சிக்கினால் அதை அனுவசியமாகப் பகிர்ந்தளிக்க அவன் பைத்தியகாரனாக அல்லவா இருக்க வேண்டும்? ஆனால் நிம்மதியாக ஆட்சி நடத்த முடியாத அளவு தமிழ் மக்கள் கிளர்ச்சி செய்வார்களானால், அதாவது அவர்களுடைய உரிமையைக் கையளிக்காமல் அரசாங்கத்தையே நடத்த முடியாது என்ற ஒரு கட்டம் உருவாக்கப்படுமானால் அவர்களுடைய உரிமையைக் கையளிக்கப் பின் நிற்கவும் மாட்டேன்.

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

ஃ

ஐ. பாலசுப்பிரமணியம், வேலணை கிழக்கு.

கே: அன்பற்ற அறிவு, அறிவற்ற அன்பு இவை எத்தகையன?

ப: அன்பற்ற அறிவு விஞ்ஞானியிடமும், அறிவற்ற அன்பு பக்தனிடமும் பொதுவாகக் காணப்படுகின்றன. விஞ்ஞானி அன்புக்கு மதிப்புக்கொடுப்பதில்லை பக்தன் அறிவுக்கு இடங் கொடுப்பதில்லை.

ஃ

வே. பொ. கந்தசாமி, எலதலை,

கே: குயுக்தியாரே, தங்களுக்கு வரும் எல்லாக் கடிதங்களுக்கும் தாங்கள் பதில் கொடுத்தால் என்ன?

ப: கொடுத்தால் நல்லது தான். அப்படிப் பதில் கொடுக்கவே நானும் விரும்புகிறேன். ஆனால் முதலாவதாக அதற்குப் போதிய இடவசதி பத்திரிகையில் இல்லை. போதிய அவகாசம் என்னிடம் இல்லை. இரண்டாவதாக கேள்வி கேட்கும் நேயர்கள் நன்கு சிந்தித்துப் புதுமையான கேள்விகளைக் கேட்காமல் பல தடவைகளில் கேட்கப்பட்ட கேள்விகளையே திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள். உதாரணமாக "நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கிறாள். ஆனால் பெற்றோர்கள் தடுக்கிறார்கள். நான் என்ன செய்யட்டும்?" என்பதுபோன்ற கேள்வி நூறுக்கு ஐம்பது விழுக்காடு வந்து சேருகிறது. இதற்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்? கேள்வி வளம் போதவில்லை. துடுக்கான கேள்விகள் வந்தால் ரஸிப்பான பதிலை ஆர்வத்தோடு எழுத ஆசை பிறக்குமல்லவா?

ஃ

வாசகன், கிரேக்மோர்.

கே: பெண்கள் வெளியிடும் மூச்சில் எத்தனை வகை யுண்டு?

ப: எனக்குத் தெரிந்த வரையில் இரண்டு வகை தான் உண்டு. கேட்டதை வாங்கிக் கொடுத்தால் தென்றல் மூச்சு, வாங்கிக் கொடுக்காவிட்டால் சூறாவளி மூச்சு. சூறாவளி மூச்சுடன் சோனாவாரியாகப் பெய்வதும் உண்டு!

ஃ

வி. ச. து. சிங்கம், மாரீசன் கூடல்.

கே: இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பறிபோன போது மவுனம் சாதித்த பிரமுகர்கள் எல்லாம் இன்று தமது பாடசாலைகள் பறிபோகின்றன என்றதும் தான் ஆர்ப்பரித்துத் துடிக்கிறார்களே காரணம் என்ன?

ப: இதை அறியாமலா பண்டைத் தமிழர்கள் பழமொழி செய்தார்கள்: "தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்னுமாம்" என்று.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்

கே: உலகில் தேடக் கிடைக்காதது எது?

ப சொர்க்கம்.

ஃ

வே. தம்பிப்பிள்ளை, இக்கினியாகலை

கே: காதல் திருமணத்துக்கும் தாய் தந்தையர்கள் நிச்சயித்து நடத்தும் திருமணத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன குயுக்தியாரே?

ப: சாமானை நேரில் பார்த்து விலை கேட்டு வாங்குவது ஒன்று. சாமானைப் பாராமலே வி. பி. போஸ்டில் தருவிப்பது மற்றொன்று.

## விண்ணமுதம் தருவாள்!

புத்திள ஞாயிறு
சித்திர வான்மிசைப்
பூத்துக் குலுங்கையிலே,—இருள்
வேர்த்துக் கலங்கையிலே,—அன்புப்
பித்துப் பிடித்தவென்
சித்தக் கடலிடைப்
பேரின்பப் பெண்வருவாள்;—அருட்
சீர்கவிக் கண்தருவாள்!

மாலைப் பொழுதினில்
நீலக் கடல், அடி
வானைத் தழுவையிலே,—அலை
வீணை ஒலிக்கையிலே,—இன்பக்
கோலக் குமரிநற்
காலெடுத் தென்மனக்
கோயிலி லேபுகுவாள்;—கவித்
தூய்மலர் வாய்நகுவாள்!

தங்கச் சுடர்மதி
பொங்கிக் கடல்மிசைத்
தாவி வருகையிலே,—எழிற்
காவும் மலர்கையிலே,—என
தங்கம் சிலிர்த்திட
மங்கலப் பெண்ணெனும்
ஆரமு தம்வருவாள்,—கவிப்
பேரமு தம்தருவாள்!

விண்மிசைத் தாரகைக்
கன்னியர் கண்வலை
வீசி நடக்கையிலே,—கதை
பேசிச் சிரிக்கையிலே,—உடன்
என்மனச் சோலையில்
பொன்மயி லொன்றுவந்
தின்ப நடம்புரிவாள்;—அவள்
அன்புக் கனிதருவாள்!

செந்தமிழ்ச் சோலையிற்
போந்தொரு வேளையிற்
சிந்தை திளைக்கையிலே,—மலர்க்
கந்தம் சுவைக்கையிலே, எழிற்
காந்த முறுவலை
ஏந்திச் சுடர்க்கவிக்
கன்னியென் முன்வருவாள்;—தூய
விண்ணமு தம்தருவாள்!

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமதி, மாத்தளை

கே: தெருவில் போகும் ஆண்களைப் பெண்கள் ஜன்னல் வழியாகப் பார்ப்பது எதனால்?

ப: சுவர் வழியாகப் பார்க்க முடியாததனால்!

ஃ

சி. இராசன், நயினாதீவு

கே: உங்களையும் மல்யுத்த வீரர் தாராசிங்கையும் யுத்தம் போட விட்டால் யார் வெற்றி பெறுவார்?

ப: யுத்தம் எங்கே நடக்கிறது என்பதைப் பொறுத்த விஷயம் இது. பலகைக் கோதாவில் நடந்தால் தாராவுக்கு வெற்றி கிடைக்கும். பத்திரிகைக் கோதாவில் நடந்தால் குயுக்தியாருக்கு வெற்றி கிடைக்கும். அறிவு அரங்கில் என்றால் எந்த குஸ்தி வீரரும் குயுக்தி வீரரை வெல்லவே முடியாதே!

ஃ

செ. விவேகானந்தா, அனுராதபுரம்

கே: கல்வி மந்திரி தஹநாயகாவுக்கும் கல்வி மந்திரி பதியுதீன் மஹ்மூதுக்கும் வித்தியாசம் என்ன?

ப: தஹநாயகா கல்வி விஷயங்களை நன்கு அறிந்தவர். பதியுதீன் கல்வி விஷயத்தில் ஒரு பாலகன். இப்போது தான் அவற்றைக் கற்றறிய வெளிநாடுகளுக்கு ஓசிப் பயணம் கட்டியிருக்கிறார்.

ஃ

தாசன், வடலியடைப்பு

கே: காட்டுக்கு அழகு எது? வீட்டுக்கு அழகு எது?

ப: காட்டுக்கு அழகு தேக்கு. வீட்டுக்கு அழகு வெளிச்சம்.

ஃ

எஸ் எம். ராமையா, பசறை

கே: குயுக்தியாரே, தாங்கள் ஆங்கிலச் சினிமாப் படம் பார்ப்பதுண்டா?

ப: தமிழில் எவ்வளவு பற்றிருந்த போதிலும் தரமான சினிமாப் படம் ஒன்றைப் பார்க்க விரும்பினால் ஆங்கிலத்தில் தானே அதைப் பார்க்க முடிகிறது.

ஃ

க. தங்கத்துரை, வாழைச்சேனை

கே: தமிழ் சினிமா உலகில் தலைசிறந்த பேச்சாளர் மூவரைக் குறிப்பிடுக.

ப: எஸ். எஸ். ராஜேந்திரன், எம். ஜி. ராமச்சந்திரன், ராஜசுலோசனா.

ஃ

நவமணி, செங்கலடி

கே: கம்பராமாயணத்திற்கு டி. கே. சி. வல்லுநராக இருந்தது போல், இலங்கையில் யாராவது ஒருவர் உளரா?

ப: ஒருவர் ஏன்? பலர் உளர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, முதலியார் ஏ. சின்னத்தம்பி, முதலியார் கு. பொன்னம்பலம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
த. பெட்டி: 649,
கொழும்பு.

## உயரும் திருமலை

திருகோணமலை நகராண்மைக் கழகத்தின் 1959-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை தமிழில் வெளியாகியிருக்கிறது பாராட்டுகிறோம். தமிழ்ப் பிரதேசத்திலுள்ள ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் இதைத் தொடர்ந்து பின்பற்றும் என்றும் நம்புகிறோம்.

அறிக்கையைத் தமிழில் வெளியிட்டிருப்பதற்காக மட்டுமல்ல எமது பாராட்டுக்கள். 1958-ம் ஆண்டு பற்றுக் குறையாக இருந்த ரூபா 1,20,595-89 ஐயும் 1959-ல் மேவி, மேலதிக வருமானமாக ரூபா 1,12 056-59 ஐப் பெற்றிருக்கிறது திருமலை நகராண்மைக் கழகம். பெரு வீதி, வாடி வீடு, நகராண்மைக் கழகக் காணிகள் கட்டடங்கள், சுகாதார சேவைகள், மின்சார விநியோகம் முதலிய இனங்களில் வருமானம் அதிகரித்திருக்கிறது. எனினும் மின் வலியில் ஏறக்குறைய சுமார் ரூபா 70,0000 வருமானம் கூடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இரண்டு இனங்களில் வருமானம் குறைந்திருக்கிறது. வாடி வீட்டு வருமானமாக ரூபா 10,809.00 கிடைத்திருக்கிறது.

நகரசபை அலுவலகத்து வேலைகள் முடிவடைந்து இப்பொழுது புதிய அலுவலகத்திலே நகராண்மைக் கழகப் பணிமனை இயங்குகிறது.

சரித்திரப் புகழ் பெற்றதும் இந்துக்களின் புனித ஷேத்திரமுமான பிரடெரிக் கோட்டையை நகராண்மைக் கழக எல்லைக்குள் கொண்டுவர ஒப்புதலளிக்கப் பட்டிருப்பதும் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

(12-ம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய நாடுகள்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாகச் 'செய்த வற்றை'விட 'நடைபெறாமல் தடுத்து வைத்த' நிகழ்ச்சிகளோ அநேகம். குழப்படிக்காரக் குழந்தைகளை தந்தை நேரடியாகக் கவனிக்காமலிருக்கலாம். ஆனால் தந்தையின் சமூகம், வீட்டில் ஒருவித பணிவை ஏற்படுத்துவதில்லையா? இந்த ஸ்தாபனம் உருப்பெறாதிருந்திருந்தால் இந்த அணு ஆயுத சகாப்தத்தில், ஐன்ஸ்டீன் கூறியது இன்று உண்மையாகியிருக்கும்.

### அம்பும் வில்லும் ஆயுதங்கள்?

"மூன்றாவது உலக யுத்தத்தில் என்ன ஆயுதங்களைப் பாவிப்பார்கள்?" என்ற கேள்விக்கு ஐன்ஸ்டீன் கூறிய பதில் இது: "மூன்றாவது உலக யுத்தத்தில் என்ன ஆயுதங்கள் பாவிப்பார்கள் என்பதை என்னால் கூற முடியவில்லை. ஆனால் நாலாவது உலக யுத்தம் எப்படியிருக்கும் என்பதைக் கூற முடியும்! நாலாவது யுத்தத்தில் மனிதன் அம்பும் வில்லுங் கொண்டு போரிடுவான்" என்றார்.

ஐன்ஸ்டீன் கூறிய பிரமாண்ட பிரளயத்திலிருந்து மனித குலத்தை இன்றுவரை காத்து வைத்திருக்கிறது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்.

### பயன் கிடைக்குமா?

கடந்த காலத்தில், யுத்தங்களை (இரண்டாவது உலக யுத்தத்தையுங் கூட) முடிவிற்குக் கொண்டுவந்தது தோற்ற நாடுகளின் கருணைக் கூக்குரலே. ஆனால் ஐக்கிய நாடு ஸ்தாபனம் தோன்றியபின் சூயஸ், ரகாரியா, இந்தோ—சீனா ஆகிய நாடுகளில் யுத்தங்கள் மூன்றுமாள் ஒருவரால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன பாலஸ்தீனத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தை நிறுத்தி 'பகைமை நிலையை' முடிவிற்குக் கொண்டு வந்திருக்கிறது ஐநா; காஷ்மீரில்யுத்தம்என்ற பெயரில் சகோதரர்களைச் சகோதரர்கள் சுட்டுத்தள்ளுவதை நிறுத்தி வைத்திருக்கிறது; துண்டுபட்ட கோரியாவில் சாந்தியை ஏற்படுத்தியிருக்கிறது; இந்தோ—சீனாவில் உலக யுத்தம் ஆரம்பிக்க இருந்த கருமேகங்களைக் கலைத்து அந்த நாட்டில் சமாதானத்தையும் சுதந்திரத்தையும் நிலை நிறுத்தியிருக்கிறது. இவை போதுமே, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்ற ஒன்று நீடித்துப் பணிபுரிவதன் அவசியத்தை நிலைநிறுத்த!

99 அங்கத்துவ நாடுகளைக்கொண்ட ஐ. நா. ஸ்தாபனம், துப்பாக்கி வெடி கேட்காத ஒரு புனித சகாப்தத்தில், மனிதனுக்கு மனிதனின் இதய ஒலி கேட்கும் இலட்சிய உலகை நோக்கி வானளாவி வளர்ந்து கொண்டே போகிறது, வான் துளாவும் எழில் கட்டிடங்கள் (Sky Scrapers) நிறைந்த நியூயோர்க் நகரிலே!

—"கும்பி"

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

## தமிழே தமிழன் உயிர்

தாய்த் தமிழைப் போற்றாது ஆங்கில மாதுக்கு அடிமையாகி பாமரராய் விலங்குகளாய் உலகம் பழிக்க வாழும் நம் மக்கள் பலருக்குப் பாரதிதாசனுடைய இப் பாடல்களாகுதல் உணர்ச்சியூட்டும் என்றெண்ணுகிறோம். தமிழிலே உங்கள் காரியங்களைச் செய்யுங்கள் தமிழ்த் தாய்க்கு முதலிடம் கொடுங்கள், தமிழராக வாழுங்கள் என்று வற்புறுத்தும் தமிழ்த் தொண்டர்களைத் தமிழ வெறியர் என்று இகழ்ந்து ஒதுக்க முயலும் அறிவிலார்க்கு இப் பாடல்கள் அறிவூட்டும் தகையன.

மொழிப்பற்று மிக்குடையான் மொழிப்போர் வீரன்
மொழிவெறியன் அவன் அல்லன்! மொழியைக் கொல்லும்
கழிவடையே மொழி வெறியன் என்று சொல்க.
கண்திறக்கு முன்னமே வாய்திறந்து
குழந்தை அழும் அதுதான் தாய் மொழி என்பார்கள்
கூண்டறையிற் கிடந்தாலும் தமிழ்க் குழந்தை
எழுப்பும் ஒலி தாய்மொழியாம் தமிழே! அன்றி
இங்கிலீ சிற்பேசல் எங்கும் இல்லை.

தமிழனொடு தமிழ்பிறக்கும். தமிழினோடு
தமிழ்மகனை தோன்றிடுவான்! தமிழும் சேயும்
இமைப்போது பிரிந்தாலும் வாழ்வ தில்லை
இதனாற்றான் மொழி ஒருவன் உயிர் என்றார்கள்
நமக்கெதிரே பன்மொழிகள் காணுகின்றோம்
நன்றவற்றைக் கொண்டவரைக் காணுகின்றோம்
தமக்குரிய மொழி நீங்கி வாழ்வார் யாவர்?
தம்முயிரைத் தாமிழந்து வாழ்வார் உண்டா?

படையெடுப்பால், பகையாளர் நுழைவால், தீங்கு
பட்டதனால் இன்று வரை உரிமை அற்று
நடைமெலிந்து கிடக்கின்ற தமிழன் தனக்கு
நற்றொண்டு செய்பவரே நாட்டின் தொண்டர்.
அடிமை எனும் சேற்றினிலே ஆடி ஆடி
அழுகிழந்த உள்ளத்தால் ஆங்கிலத்தைத்,
துடை தட்டித் தாய்மொழியாய்ச் செய்வார், கெட்ட
குறையினைப் பொதிகையிலே வாழச் செய்வார்.

புதுப்பொருள்கள் தோன்றின; அப் பொருள்கட் கெல்லாம்
புதுப்பெயர்கள் தமிழினிலே சேர்க்க வேண்டும்
இதையறியார், வேறுமொழி கிடைக்கு மட்டும்
இத்தமிழே இருக்கட்டும் என்று சொன்னார்
மதுரையினும் நல்லநகர் கிடைக்கு மட்டும்
மதுரையே இருக்கட்டும் என்று சொன்னால்
மதுரையிலே வாழ்கின்ற நாயும் வேறு
மாநகர்க்குப் குடிபோக ஒப்பா தன்றோ!

ஆங்கிலந்தான் உலகமொழி என்று சொல்வார்;
ஆனாலும் தமிழ்மொழிநம் தாயே அன்றோ?
ஆங்கிலந்தான் உலகமொழி என்று சொல்வார்
தமிழ் மொழியும் அந்தநிலை எய்தும் வண்ணம்
ஈங்கிருந்து பெருமுயற்சி செயலாம் அன்றோ
இது செய்யோம் என்பவர்கள் வாயை மூடித்
தூங்கலாம் அன்றோ? வாய்த் துடுக்குக் காட்டித்
துன்பத்தை விலை பேசி வாங்கல் நன்றோ?

குயில் 18—10—60

### தமிழியக்கத் தொண்டர்கள்

615 தா. அருளானந்தம், இளவாலை; 616 ச. ஞா. மதலமுத்து, பாலாங்கொடை; 617 சி. கிருஷ்ணன், வதுளை; 618 கு. கார்த்தலிங்கம், கிரான்குளம்; 619 ஆ. கணபதிப்பிள்ளை, மன்னம்பிட்டி; 620 எம். அப்துல் கையூம், பொத்துவில்; 621 சி. களியப்பெருமாள், பலாங்கொடை; 622 க. சங்கரப்பிள்ளை, பெரிய கல்லாறு; 623 செ. புவனேந்திரராசா, மட்டக்களப்பு; 624 ஆ. செல்வரத்தினராசா, கைதடி; 625 கு. பூ. சந்திரன், உரும்பராய்; 626 வே. மூனுசாமி, பலாங்கொடை; 627 க. குமரகுரு, உடுகம; 628 த. டி. தமிழ்ச்செல்வன்; கொழும்பு-13; 629 எம். ஏ. அப்துல் அசீஸ், கல்முனை; 630 ரி. சித்திரவேல், தம்பலகமம்; 631 சீ. அம்பிகாபதி, பெரிய கல்லாறு; 632 க. நடேசன் பிள்ளை; 633 சி. நாகமணி, கிருன்பாஸ்; 634 அ. குமாரசா , 635 சு. தம்பிராசா, 636 சு.கிருட்ணபிள்ளை, 637 ப. வேல்முருகு, 638 வே. வைரமுத்து, வந்தாறுமூலை; 639 ச. சாமிநாதன், 640 ந. சித்தன், 641 நா. இராமையா, 642 ரு. தங்கவேல், 643 நா. சுப்பிரமணியம், 644 ஆ. கனகரட்னம், 645 அ. சிவலிங்கம், தெகியோவிற்ற; 646 வள்ளுர் மன்ற உறுப்பினர், மீசாலை; 647 செல்வி. எம். ஆர். அன்னலெட்சுமி, கிரிலப்பனை.


"ஆடிவரும் ஆடகப் பொற்பாவையடி நீ,
அன்றும் இன்றும் என்றும் என் ஆவியடி நீ...."

என்று போற்றும்படி எழில் மிகு அழகு
இராணிகளாய்த் திகழ இன்றே அணியுங்கள்

எலைட் சுப்பர்லோன்
ஜோர்ஜெட்



இது;
கண்ணைப் பறிக்கும் அழகிய பல
நிறங்களிலும்; நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களிலும்
குறைந்த விலையிலும் எங்கும்
கிடைக்கும்.

சாரியின் விலை ரூ. 19-80

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலை
நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை
இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில்
குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும்
மாலைகீதம் நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள் -

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

சில்லறை வியாபாரப் பகுதி:
110 & 114, மெயின் வீதி.

கொழும்பு.

மொத்த வியாபாரப் பகுதி:
26, கெய்ஸர் வீதி.

Mylads 693/60



## யாழ்ப்பாணம் கைத்தொழில் கல்லூரி (பெண்கள்)

ஆசிரியர் பலரது வருங்காலம் பின்வரும் கைவேலைகளில் தேர்ச்சி பெறுவதிலேயே தங்கியிருக்கிறது.

1. யப்பானிய, இந்திய முறைகளைப் பின்பற்றி பொம்மைகள் செய்தல்.
2. தையல் வேலை.
3. தையல் பொறியை உபயோகித்து சித்திரத் தையல் வேலைகளைச் செய்தல்.
4. கடதாசி பசை இவற்றை உபயோகித்து விளையாட்டுப் பொருள் செய்தல்.
5. தட்டெழுத்தும் மற்றும் ஏனைய கலைகளும்.

யாழ்ப்பாணம் கைத்தொழில் கல்லூரி
(பெண்கள்)
31, இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபை

## சர்வநாசத்திலிருந்து மனித குலத்தை பாதுகாத்து வருகிறது

### அதன் இலட்சியம் சுபீட்சம், சமாதானம், சாந்தி; கையிலுள்ள ஆயுதம் உலக அபிப்பிராயம்

அணுக்குண்டு தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மனித குலத்திற்கு இருக்கும் ஒரேயொரு நம்பிக்கை ஒளி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம். ஒரு தலைமுறையில், இரண்டு மகா யுத்தங்களின் கோரத்தை அனுபவித்த மனித குலத்தின் இலட்சியக் கனவு இது!

யுத்தங்களில் வெற்றிகண்டும் களைப்படைந்த நாடுகள் இனிமேல் யுத்த மெதுவுமே உலகத்தில்வேண்டாம் என்ற பேரவாவுடன் இந்த ஸ்தாபனத்தை உருவாக்கின. உலகனைத்துமுள்ள மக்கள் சுபீட்சமும் சாந்தியும் பெற்று நிம்மதியாய் வாழ வழி காட்டின இந்த நாடுகள்.

#### இலட்சியம்

உலகத்தில் எங்காவது ஆக்கிரமிப்புத் தோன்றினால், ஆக்கிரமிப்பாளருக்கெதிராக ஏனைய நாடுகள் கூட்டாகச் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது ஐ. நா. ஸ்தாபனத்தின் நோக்கங்களில் ஒன்று. சர்வதேசியப் பிணக்குகளில் பேச்சுவார்த்தை, மத்தியஸ்தம், நீதி மன்றத் தீர்வு ஆகியவை இடம் பெற வேண்டுமென்பதும் ஐ. நா. வின் கனவு. உலக நாடுகள் அனைத்தும் இறுதியில் நிராயுத பாணிகளாகும் வரை, ஆயுத வகைகளையும் அவற்றின உற்பத்தியையும் கட்டுப்படுத்தி ஆக்க வழிகளில் மனித சக்திகளைச் சீர்படுத்துதல் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இலட்சியம்.

'இனம், மதம், மொழி, பால் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எவ்வித பாகுபாடும் காட்டாது மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் கௌரவம் அளிக்கும்' மனோபாவத்தை வளர்ப்பதில் ஐ. நா. கரிசனை கொண்டுள்ளது.

#### ஜீவாதாரப் பணி

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஒரு அரசாங்கமல்ல. மக்கள் கீழ்ப்படியும்படி அரசாங்கங்கள் சட்டமியற்றுவது போல, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சட்டமியற்ற முடியாது; அங்கத்துவ நாடுகளுக்குக் கட்டளையிட முடியாது. ஆனால் கட்டளையிலும் காத்திரமான ஒரு 'பிடி' ஐ. நாவின் கைகளிலுண்டு. அதுதான் 'உலக அபிப்பிராயம்'. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இறுதி இலட்சியங்களை நோக்கி அங்கத்தவ நாடுகள் முன்னேறினாலும் சரி முன்னேறாவிட்டாலும்சரி, இந்த ஒரு துறையில் உலக ஸ்தாபனம் பெரும் பணி புரியவே புரிகிறது.

#### உலக அபிப்பிராயம்

அதாவது உலகத்தின் விதியைத் தமது கைகளில் ஏந்திக் கொண்டிருக்கும் ருஷ்யாவும் அமெரிக்காவும் கெடுபிடி யுத்தத்தில் தத்தம் பக்கங்களுக்கு ஆள் திரட்டும் பணியில் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றன. இந்தத் துறையில் ஐக்கிய நாடுகள் மன்றத்திலுள்ள அங்கத்துவ நாடுகளின் அனுதாபத்தைப் பெறும் நோக்கத்தில், இவை சிறிது நிதானமாகவே நடந்து கொள்ளுகின்றன. சர்வதேச விவகாரங்களில் உலக அபிப்பிராயத்தின் பங்கு என்ன என்பது இதிலிருந்து ஓரளவு தெரிகிறது அல்லவா?

#### பின் தங்கிய நாடுகளின் அதிர்ஷ்டம்

யானையும் யானையும் மோதும் வேளையில் இடையிலிருப்பவர்கள் தமது விஷயங்களையும் கிரமமாகக் கவனித்துக் கொள்ளுகிறார்கள். பின் தங்கிய நாடுகள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் அடையும் நன்மை எல்லை கடந்தது. உலக சுகாதார ஸ்தாபனம், உணவு, விவசாய ஸ்தாபனம் ஆகிய நிறுவனங்கள் மூலம் அபிவிருத்தி குறைந்த நாடுகள் இன்றுவரை பெற்றுள்ள நன்மைக்கு அளவில்லை.

உலக மக்களதும் தலைவர்களதும் சிந்தனைச் சூழ்நிலையை மாற்றியமைத்து, பலாத்காரமொழிந்து, சாந்தியும் சமாதானமும் நிரம்பிய ஒரு உலகைச் சிருஷ்டிக்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இறுதி இலட்சியத்திலிருந்து, இந்த நடவடிக்கைகள் வெகு வெகு தூரத்திலிருப்பவையே. ஆயினும் இத்தனை நாடுகளும் ஒரு ஸ்தாபனத்தில் ஒன்று கூடிப் பேசுவதே ஒரு ஆரம்ப சாதனைதான்; சிந்தனைத் துறையில் ஒரு திருப்பம்தான்! மனித குலத்தின் கனவு ஒன்று நினைவேற ஐந்து பத்து வருடங்களில் முடியாது. ஆனால் உரிய சூழ்நிலை மெல்ல மெல்ல உருப் பெறுகிறது என்பது மட்டும் நிச்சயம்.

உலக ஸ்தாபனத்தின் சாதனை பிரத்தியட்ச செய்கைகளாக உருவகம் பெறுதிருக்கலாம். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் காரியத்தில்

(4ம் பக்கம் பார்க்க)

இரண்டாவது உலக யுத்த முடிவில் சான் பிரான்ஸிஸ்கோவில் நிகழ்ந்த நேச நாடுகளின் மாநாட்டில் கருப்பெற்றது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம். ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதத்தில் ஐ. நா. ஸ்தாபனத்தின் பொதுச் சபை கூடுகிறது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப பொதுச் சபையின் கூட்டத் தொடர் நீடிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பவிசு' இழந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் காட்டும் ஜனநாயக 'மவுசு'!

இலங்கையனைத்திலும், சுற்றியுள்ள நாடுகளிலுமெல்லாம், பெருமழை பொழிகிறது. இலங்கையின் மழை வீழ்ச்சியைப் பொறுத்தவரை 'பெரும் பரவலாக' ஒரு நியதி கூறலாம். தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று மே மாதம் தொடங்கி இலங்கைக்கு மழை கொண்டு வருகிறது. வட கீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று நவம்பர் தொடங்கி ஒரு மாதங்களுக்கு மழை கொடுக்கிறது. இந்த இரண்டு காற்றுகளும், ஒன்று முடிந்து மற்றது ஆரம்பமாகும் இடைக்காலத்தில்—ஏப்ரலிலும் அக்டோபரிலும்—பலம் குறைந்திருக்கும். இந்தப் பலங் குறைந்த காலத்தில் தன் பலத்தைக் காட்டுகிறது, 'இடி முழக்கத்துடன் பெய்யும் மழை'(Convectional Rains). பருவப் பெயர்ச்சி மழையும் இடி முழக்க மழையும் இலங்கை மேல் ஆதிக்கம் வகிப்பதில் தீவிர போட்டி போடுவன. இருந்தும் வருடத்தில் பெரும் பகுதியில் பெய்வது பருவப் பெயர்ச்சி மழையே.

இலங்கையின் சுவாத்தியத்தில் இரு சக்திகளும் எடுத்துக்கொள்ளும் பங்கைப் போன்று இலங்கைப் பாராளுமன்றத்திலும் இரு சக்திகள் போட்டி போடுகின்றன. பாராளுமன்றத்தில் பெரும் பகுதி நேரம் ஐக்கிய தேசியக் கட்சியை 'நொருக்குவதில்' தான் செலவாகிறது. இதில் தளர்ச்சி ஏற்படும் சில நேரங்களில் லங்கா சமசமாஜக் கட்சிக்கும் (பிலிப்பைடாவின்) மக்கள் ஐக்கிய முன்னணிக்குமிடையில் தான் போர்! அது சென்ற வாரம் ஓய்ந்ததும் மீண்டும் ஐ. தே. கட்சியின் மேல் பறக்கவிடப்படும் பாணங்களில் ஒன்று இரண்டைப் பார்க்கலாம்!

சொல்மன் டிலி குணவர்தன:

முதலாவது பாராளுமன்றத்தில் நான் ஒரு உறுப்பினராயிருந்தேன். அங்கே எதிர்க் கட்சிக்காரர்கள் எப்படி நடத்தப்பட்டார்கள் என்பது எனக்கு நன்முக நினைவிருக்கிறது. 1953-ல் டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் எனது தொகுதியில் ஒரு கூட்டம் நிகழ்ந்தது. கொழும்பு தெற்கின் முதலாம் பிரதிநிதி (ஜே ஆர். ஜெயவர்தன, ஐ. தே. க)யும் அங்கேயிருந்தார்—1949-ல் என்று நினைக்கிறேன்—அப்போது மந்திரி சபையிலிருந்த ஏ. ஈ குணசிங்கா கூட்டத்தில் கூறினர்: 'எதிர்க் கட்சிப் பிரதிநிதிகளின் தொகுதிகளில் எவ்வித வேலையும் நடைபெற மாட்டாது" என்று. மேலும் கூறினர்: "உங்களுக்கு எதுவும் (உதவி) தேவையானல் சொல்மண்டிலிக் கூடாக வராதீர்கள். எதுவுமே நடக்காது."

(ஜே. ஆர். ஜெய: எனக்கு இது ஞாபகமில்லே.

திரு. சொல்: ஐ தே. கட்சி பின்பற்றி வந்த கொள்கை இதுதான்!

டாக்டர் என். எம். பெரேரா: இங்கே அவர்கள் விரித்துரைக்கும் கொள்கையும் அதுவேதான்!

திரு. சொல்: இப்பொழுது வந்து, இவர்கள்தான் ஜனநாயகத்தைப் பற்றியும் எதிர்க் கட்சியின் உரிமைகள் பற்றியும் பேசுகிறார்கள்!

பாராளுமன்றத் துணுக்குகள்...

திரு சொல்: ஐக்கிய தேசியக் கட்சியின் காபந்து அரசாங்கம் நடைபெற்ற காலத்தில் நடந்த ஒரு சம்பவம்! ஆஸ்பத்திரி (உத்தியோக பூர்வமற்ற) பார்வையாளர்கள் நியமனம் பற்றி, வழமைபோல், எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்கம் எழுதியது ............நான் எனது தொகுதிக்குரிய சிபார்சுகளை அனுப்பினேன். மற்ற (அன்றிருந்த) எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளும் அப்படியே எழுதியிருப்பார்கள் என்று நம்புகிறேன். என்ன நடந்தது? சமசமாஜக் கட்சி, சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் செய்த சிபார்சுகளில் ஒன்றுவது கவனிக்கப்பட்டது கிடையாது. இதற்கு மாறுக, இரகசியமாகத் (தமக்குப் பிடித்த) ஆஸ்பத்திரிப் பார்வையாளர்களின் பெயர்களை அனுப்பி வைக்கும்படி கட்சி அபேட்சகர்களைப் பொதுக் காரியதரிசி கேட்டிருந்தார். .........இவ்வபேட்சகர்கள் கேட்டிருந்த நியமனங்கள் எல்லாம் நடைபெற்றன!

ஒரு பிரதிநிதியின் குரல்: சீ! என்ன வெடகக் கேடு!

திரு சொல்: இது பற்றி மேலும் பேசுவதில் பயனில்லே!

ஜே. ஆர். ஜெய: (ஐக்கிய தேசியக கடசி) நாங்கள் பாடம் படித்துவிட்டோம்!

அவைப் புரு

## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழல்களை யெல்லாம் அகற்றுங்கள்

— என். எம். இராசமாணிக்கம்

செப்டம்பர் 6, 1960

ஒத்திவைப்பு பிரேரணையின் போது பட்டிருப்புப் பிரதிநிதி ஊழல்களைக் களைந்தெறியுமாறு பேசினர். பல பிரதிநிதிகளும், சபாநாயகரும் கூடவே இடை மறித்தும் கேளாது ஊழல் ஒழிப்பின் அவசியத்தை அவசரம் அவசரமாகப் பேசி முடித்தார் திரு. எஸ் எம். இராசமாணிக்கம்!

"உணவு மந்திரியுடன் இவ் விஷயத்தைப் பற்றிப் பேச விரும்புகிறேன். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கும் விதம் பற்றி விசாரணை ஒன்று நடத்த வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்ட நான் விரும்புகிறேன். பல நோக்கங்களைக் கொண்டு இயங்கும் வண்ணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அவசரத்தில் நிறுவப்பட்டன. நிறுவப்பட்ட அவசரம் காரணமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாறியிருக்கின்றன.—அந்த ஒரு நோக்குத்தான் (ஊழியர்கள் செய்யும்) மோசடி! இவ் விஷயமாக ஒரு விசாரணை சபையையோ ஒரு கமிட்டியையோ நிறுவுவதன் அவசியத்தை மந்திரியாருக்கு எடுத்துக் காட்டுவதே என் நோக்கம். இச் சங்கங்களின் அமைப்பு, இயங்கும் முறை, இவற்றினிடையேயுள்ள முரண்பாடுகள் ஆகிய அனைத்தையும் பிரஸ்தாப விசாரணை சபையோ, கமிட்டியோ விசாரிக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இச் சங்கங்கள் இயங்குவதின் ஒரே நோக்கம் நெல்லுக் கொள்முதலே. இக் கொள்முதலில் எத்தனையோ மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. எதுவித அடிப்படையுமில்லாமல், கண்டபடி, சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. பல இடங்களில் வியாபாரிகளே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் ஊழியர்களாயிருக்கிறார்கள். இவர்களே இச் சங்கங்களின் நிர்வாகமனைத்தையும் தம் கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் கிராமப் புறங்களில் நிறுவப்பட்ட சங்கங்களை, கூட்டுறவு இயக்கங்களிலிருந்து வெளியேற்றப் பட்டவர்கள் இன்று கட்டுப்படுத்தி வருகிறார்கள்.........

சபாநாயகர்: கௌரவ அங்கத்தவர் தமது குறிப்புரைகளைச் சுருக்கிக் கொள்ள வேண்டும்.

ஜே ஆர். ஜெயவர்தன: நாங்களும் கேள்விகள் கேட்க விரும்புகிறோம்.

திரு. எஸ். எம். இராச: மந்திரியாரிடமிருந்து நான் கேட்பதெல்லாம்......

மந்திரி சமரவிர: கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் பதில் கூற எங்களுக்கு நேரம் கிடைக்காது போகலாம்.

ஜே ஆர். ஜெய: கேள்விகள் கேடக எங்களுக்கு நேரமில்லாது போகலாம்.

எஸ் எம். இராச: ......கேட்பதெல்லாம் இதுதான். பல

(13-ம் பக்கம் பார்க்க)



பேராசிரியர் சின்னத்தம்பி

## கொம்யுனிஸ்டு கந்தையா

### தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்

### பேராசிரியர் சின்னத்தம்பி விளக்கம்

"கொம்யுனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவரும் முன்னுள் பருத்தித்துறைப் பிரதிநிதியுமான காலஞ்சென்ற திரு. பொ. கந்தையா திருமலேயில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தோற்றுவிப்பது பற்றி என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்று கொம்யுனிஸ்டு நண்பர்கள் சிலர் கேட்கிறார்கள். இது என்ன கேள்வி? திரு. கந்தையா அதைப் பூரணமாக ஆதரித்தார். அவர் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தில் ஒருவராகவே இருந்தவர் ஆயிற்றே''—இவ்வாறு பேராசிரியர் சின்னத்தம்பி கூறினர்.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத் தலைவரான பேராசிரியர் அ. சின்னத்தம்பி மேலும் கூறியதாவது:—

"திரு. கந்தையா என்னுடைய நண்பர்களில் ஒருவர். அவரை அரசியல் சாஸ்திரத்தில் ஒரு பண்டிதராகவும் புத்தகசாலே விஷயங்களில் வல்லுநராகவும், சர்வகலாசாலே விஷயங்களில் விற்பன்னராகவும் தான் பலருக்கும் தெரியும். தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் எத்தகைய கருத்து அவருக்கு இருந்தது என்பது எனக்கு நன்முகத் தெரியும். சிங்களவருக்கு சிங்களம் எப்படியோ அப்படியேதான் தமிழ் பேசும் மக்களுக்கும் தமிழ் இருக்க வேண்டும்—அதுவும் சட்டரீதியாக என்று விரும்பியவர் அவர். இன்னும் தமிழ் பேசும் மக்கள் தங்கள் மொழி, கலே, கலாசாரம், பண்பாடு-இவற்றை வளர்க்கச் சுயாதீனம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்றும் திரு. கந்தையா ஆசைப்பட்டார்.

முதல் கையொப்பம் இட்டவர்


அப்படிப்பட்ட திரு. கந்தையா தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு வெளியே இருக்க முடியுமா? இயக்கத்தில் ஒருவராக இருந்து முழு ஆதரவு தந்து வந்தார். தமிழ்ப் பல்கலைக் கழகம் தோற்றுவிப்பது சம்பந்தமாகத் தமிழ் பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகளதும் மேயர்களதும் நகரசபைகள், கிராமச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்களதும் கருத்தை அறியவும் அவர்களது ஒத்துழைப்பைப் பெறவும் நாம் விழைந்தபோது திரு. கந்தையா ஒரு பேருபகாரம் செய்தார் தாமே ஒரு கடிதம் எழுதி அதில் முதல் கையொப்பமாகத் தமது கையொப்பத்தை இட்டு மற்ற (தமிழ் பேசும்) பாராளுமன்றப் பிரதிநிதிகளிடம் கொடுக்கும்படி தந்தார். (இதில் தான் மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதி ஜனுப் மாக்கான் மாக்கார் உட்பட எல்லாத் தமிழ் பேசும் பிரதிநிதிகளும் பின்னர் கையொப்பமிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.)

(13-ம் பக்கம் பார்க்க)


இனிய நாதத்திற்கு இணையற்றது

நாஷனல் ரேடியோ!!

இது ஆறு டார்ச் பாட்டரிகளில் அறுநூறு மணிக்கு மேல் இயங்கும்



National

மாடல் DB 323

இதன் எட்டு ரான்சிஸ்டர்களும்; சக்தி வாய்ந்த ஏரியலும்; இரு அலே வரிசைகளும் திறமையான சேவை புரிவன.

விலே ரூ. 295/—

ஒரு வருட உத்தரவாதம்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

எலெட் ரேடியோ & என்ஜினியரிங் கம்பெனி,

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

போன் : 79788


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# என் தம்பி.. ஒரு இலட்சிய புருஷனுக விளங்கினுர் வன்னியசிங்கம்

காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி அவருடைய மூத்த சகோதரியார் திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேச லிங்கம் "என் தம்பி வன்னியசிங்கத்தை உருவாக்கிய பரம்பரையும் சூழலும்" என்ற தலைப்பில் எழுதும் தொடர் கட்டுரையின் பத்தாவது பகுதி இது.

திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம்
B. A. (Hons), (Lond) M. Litt

[முற்றொடர்]

நம் விஷயத்தில் மட்டு மல்ல, எவர் விஷயத்திலும் தராசு முனையில் நியாயம் வழங்கப்பட்டால் தான் தாயாருக்குத் திருப்தி. அதிக்கிரமம் எதுவும் தாயாருக்கு ஆத்திரத்தை மூட்டும். சிறுமை கண்டாற் பொங்கி வார்த்தைகளைச் சிதறுவார் தாயார் பிறருக்கு அநீதி இழைக்கப்படுவதை அறிந்தாலும் ஆத்திர ஆவேசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிச் சில சமயம் "வீண் பொல்லாப்பு" தேடிக் கொள்வார்.

இவ்வாறு சில விஷயங்களில தந்தையார் சுபாவமும் தாயார் சுபாவமும் ஒன்றுக்கொன்று எதிராய், ஒன்றையொன்று நிறைவு படுத்தும் முறையில் அமைந்து, கூட்டு வலியால் குடும்ப காரியங்களைச் சிதைவுறுதபடி காத்து நடத்தும் வகையில் செயல்படுவனவாக இருந்தன.

## பொன் மலர் நறுமணம் பெற்றது

இருவர் சுபாவங்களிலும் நல்ல அம்சங்கள் வன்னியசிங்கத்தின் சுபாவத்தில் இழைந்து நிறைவு பெற்றுச் சோபித்தன; இருவர் சுபாவங்களிலும் இருந்த சிறு குறைகள் இடம் பெருமல் மறைந்தொழிந்தன. தாயாரிடமிருந்து பெற்ற உடலுழைப்பை உவந்து மேற்கொள்ளும் சுபாவமும் தந்தையாரிடமிருந்து பெற்ற நுண்மாணுழை புலமும் கூரிய மதியும் வன்னியசிங்கத்திடம் ஒன்றி இழைந்து ஒன்றை ஒன்று சிறப்பித்தது; பொன் மலர் நறுமணமும் பெற்றது போலாயிற்று. கருமமே கண்ணுயிருக்கும் தாயாரது வினைத்திட்பமும் தந்தையாரது கண்ணேட்டமும் தன் சுபாவத்தில் கலக்க, வன்னியசிங்கம் கருமம் சிதையாமற் கண்ணேட வல்லராயினுர்.

## கலையியலும் உலகியலும்

தந்தையாரது கலையியல் ஞானமும் தாயாரது உலகியல் ஞானமும் இருவரும் சேர்ந்து அளித்த கல்வியும் கற்ருேர் பழக்கத்தாற் பெற்ற கேள்வியும் ஒருங்கு இயைந்து, உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரியும் புலமையை—நிறைந்த அறிவாற்றலை—அவருக்கு அளித்தன. உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்னெச்சரிக்கையும் உறுதியும் தாயாரிடமிருந்து பெறப்பட்டு, தந்தையாரது வினைசெயல் திறமையுடன் இணைந்து, வன்னியசிங்கத்தை, ஈழத் தமிழ்ச் சமூகத்தின் உரிமைகள் விஷயத்தில் முன்னெச்சரிக்கையுள்ள காவலாளியாகவும், செயல்வகை சூழ்ந்து, திறமையுடன் பணியாற்றும் இணையற்ற தொண்டனுகவும் அமைத்தன.

## ஆன்றவிந்தடங்கிய சான்ருேன்

தாயாரைப் போல், சிறுமை கண்டு பொங்கும் உள்ளம் படைத்த அவர் தந்தையாரிடமிருந்து பெற்ற நிதான புத்தியால் ஆத்திர ஆவேசத்தை அடக்கி அந்த அநீதிகளுக்கு பரிகாரம் தேட ஒல்லும் வகை முயலும் கடமைக்குத் தம்மை அர்ப்பணித்தார். தாயாரிடமிருந்து பெற்ற மாருத நேர்மையையும் வாய்மையையும், இன்பம் விழையா இயல்பும், தாய் தந்தையர் இருவரிடமுமிருந்து பெற்ற ஆழ்ந்த சமயப் பற்றும் அவரை ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேன் ஆக்கின. இருவரிடமுமிருந்து பெற்ற மொழி அபிமானமும் சுதந்திர தாகமும் அவருக்கு ஓர் உயர்ந்த குறிக்கோளை அளித்தன. எல்லாக் குண நலங்களும் நிறைந்த இலட்சிய புருஷனுக விளங்கினுர் என் தம்பி.

## அதிசயத்தைக் கண்டோம்

ஸ்ரீராமபிரானை இலட்சிய மைந்தன், இலட்சிய சகோதரன், இலட்சிய நண்பன், இலட்சிய கணவன், இலட்சிய மன்னன் என்று தந்தை தாயார், சகோதரர், நண்பர், தேவி, குடிகள் அனைவரும் பற்றிக் கொண்டு தம் அன்பையும் அபிமானத்தையும் அவர்மீது பொழிவதை இராமாயணத்தில் பார்க்கின்றோம். நிஜவாழ்வில் வன்னியசிங்கத்தை இலட்சிய மைந்தனுகப் பெற்றோரும், இலட்சிய சகோதரனுகச் சோதரரும், இலட்சிய நண்பன் என்று நண்பரும், இலட்சிய கணவன் என்று மனைவியும், இலட்சிய தந்தை என்று அவரது தந்தையன்பில் சிலவருடமேனும் திளைக்கும் பாக்கியம் பெற்ற குழந்தைகளும், பெறலருந் தலைவர் என்று பெரு மக்களும் பொது மக்களும், உற்ருரும் மற்ருேரும் பற்றிக்கொண்டு அவர்மீது தம் அன்பையும் அபிமானத்தையும் பொழிந்த அதிசயத்தைக் கண்கூடாகக் கண்டோம். பகைவனுன இராவணனுல்கூட மனமார வாயாரப் புகழப்பட்டு இலட்சிய பகைவனுகவும் விளங்குகிருன் இராமன். அரசியலில் வன்னியசிங்கத்தோடு மாறுகொண்ட இதரகட்சிகளின் தலைவர்களான எதிரிகளும் கூட வன்னியசிங்கத்தின் நேர்மையையும் தியாகத்தையும் மனமார வாயாரப் புகழ்ந்துள்ளனர்.

## எல்லார்க்கும் எல்லாமானுர்

"எல்லாருக்கும் எல்லாமாக இருக்க முயல்கிருர்" என்று பிறர்சிலரைக் குறித்து இகழ்ச்சிக் குறிப்புடன் ஏனையோர் கூறக் கேட்டிருக்கிறோம். வன்னியசிங்கம் எப்படி எல்லோருக்கும் எல்லாமாக இருந்தார்? அவரோடு நெருங்கிப் பழக நேர்ந்த அத்தனைபேரும் அவரையே தாரகமாகப் பற்றியது ஏன்? அத்தனை பேருக்கும் இன்று பற்றுக் கோடிழந்து பரிதவிக்கும் உணர்ச்சி ஏற்பட்டிருப்பது ஏன்?

சிறு வயதிலிருந்தே தன் மனத்தில் தோன்றும் சிறிய ஆசைகளைப் பெரிதுபடுத்தி அவற்றை நிறைவேற்றப் பிடிவாதம் கொண்டு தாய் தந்தையருடன் மாறுபட்டு வாதாடும் வழக்கம் வன்னியசிங்கத்துக்கு இல்லை. என்றுமே தம் ஆசைகளைப் பொருளாக மதியாமல்தாய் தந்தையர் விருப்பத்தையே மதித்து அவர்கள் சொற்கேட்டு அடங்கி நடக்கும் சுபாவம் அவருக்கு வாய்த்திருந்தது. ஒப்புரவு அவருக்குக் கருவிலேயே அமைந்த ஒரு அருங்குணம் போலும். பெற்ருேரது குடும்பக் கவலைகள் தொல்லைகள் வேலைக் கஷ்டங்களை அனுதாபத்துடன் அவதானித்து உணர்ந்து பிள்ளைப் பருவ முதலே தம்மாலியன்ற உதவி—சிறிதோ பெரிதோ—அன்புடன் செய்ய முற்படுவார் வன்னியசிங்கம். அவர் தூண்டுதலால் தம் அறிவு கொண்டு மனதை ஒருப்படுத்தி, கடமையைத் தட்டிக் கழிக்காமல் செய்யப் பின் தொடர்வார்கள் அவர் சோதரர்.

## தம்பியை வழி நடத்தினுர்

எப்படியோ உணவும் உடையும் படிப்புக்கு வேண்டிய புத்தகங்களும் பள்ளிச் சம்பளமும் கொடுத்து மேலும் தன் கைச் செலவிற்குப் பணமும் இறுப்பது தாய் தந்தையர் கடமை; அவையெல்லாம் பெற்றுத் தான் அலுங்காமல் நலுங்காமல் வாழ்வது தன் உரிமை என்று அவர் எண்ணியதில்லை. நோயாளியாகிவிட்ட தந்தையாருக்குச் சிரமத்தைக் குறைக்கத் தன் சட்டப் படிப்புக்கு வேண்டிய பணத்தில் ஒரு பகுதியாவது தான் படிக்கும்போதே ஒய்வு நேர உழைப்பால் தேடிக்கொள்ள வேண்டும் என்று எண்ணினுர். ஒரு ட்யூடரி (Tutory) யில் ஒய்வு நேரத்தில் படிப்பித்துச் சம்பாதித்தார். சர்வகலாசாலைக் கல்லூரிப் படிப்பிற்கான உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சையில் தம்பியார் சித்தி பெறுவதற்குத் தான் பெரிதும் முயன்று அவரை ஊக்கினுர். தம்பியாரைத் தன்னுடன் வைத்திருந்து படிக்க வேண்டிய விஷயங்களைத் தெரிந்து கொடுத்துப் படிக்குமுறை வழிதுறை வகுத்து, மாதிரி வினுக்கள் தேடி அவற்றுக்கு விடைகள் எழுதுவித்துத் திருத்திப் பல விதத்திலும் வழிகாட்டி உதவினுர்.

## தந்தை கட்டளைக்கு மாறு பேசாதவர்

தம்பியாரது முயற்சியோடு தமையனுர் வழி வகுத்து நெறிகோலித் துணை செய்த பெருமுயற்சியும் சேர்ந்ததனலேயே தம்பியார் உபகாரச் சம்பலம் பெற்ருர் என்று பெற்ருேர் கருதினர். ஒய்வுநேர உழைப்பினுல் சட்டப் படிப்புத் தாமதமாவது கண்டு அவ்வுழைப்பை நிறுத்தும்படி தந்தையார் உத்தரவிட்ட போது மாறு பேசுப் பேசாது நிறுத்தி விட்டார் வன்னியசிங்கம்.

தந்தையார் நோயினுல் படுத்த படுக்கையாக ஆஸ்பத்திரியில் இருக்க நேர்ந்த போது அருகில் இருந்து பணிவிடைகள் செய்வதை ஒரு பாரமாகக் கருதவில்லை வன்னியசிங்கம்; குறிப்பறிந்து குற்றேவல் செய்து பட்சத்தோடு பராமரித்தார். வைத்தியர் அநுமதியோடு தந்தையார் வீட்டுக்கு மீண்ட பிறகுதான் அவரைப் பராமரிக்கும் பொறுப்பைச் சகோதரரிடமும் தாயாரிடமும் ஒப்புவித்து விட்டு, இடையில் விட்டு வந்த தம் படிப்பைத் தொடரக் கொழும்புக்கு மீண்டார் வன்னியசிங்கம்.

## வாயார வாழ்த்து

எதன் பொருட்டும் பெற்ருேர் பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேசாது அவர்கள் மனங்கோணுதபடி என்றும் நடந்து, ஆலமரத்தைத் தாங்கும் விழுது போலத் தந்தையார் தளர்ந்தபோது அவருக்கு ஆதரவாய்ப் பொறுப்புணர்ச்சியோடு ஒய்வு நேரத்திலும் உழைத்துப் படிக்க முற்பட்ட மகனை மாதா பிதாக்கள் மனங் குளிர வாழ்த்துதல் இயல்பேயல்லவா? இவர் விஷயத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட மனநிறைவு "மைந்தனைப் புகழ்வது என்றும் மனத்திற்குள்ளேயே" என்ற பழைய விதியையும் மறக்கச் செய்து சில பல சந்தர்ப்பங்களில் தம் புண்ணியப் பயனை மூத்த மகனுகவந்தது என்று வாயாரப் புகழும்படி செய்து விட்டது.

## சிவில் சேர்விஸ் அடிமைப் பதவி

தந்தையார் இருக்கும் போதே தம்பியாரின் படிப்பில் கவனம் செலுத்தி ஊக்கம் அளித்து, உபகாரச் சம்பளம் பெற உதவி, அவர் படிப்புக்கு ஆக்கம் தேடிய அண்ணனுர், தந்தையார் சிவபதமடைந்தபின் இன்னும் அதிக கவனம் செலுத்தலானுர். வன்னியசிங்கம் சர்வகலாசாலைப் பட்டப் பரீட்சையில் தேறிய பிறகு

(13ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவில் பாராட்டு தமிழன் ஆடைக்கு

## இலங்கை திரும்பிய 'பாலா' தகவல்

"தமிழன் ஆடைக்கு அமெரிக்காவில் பாராட்டுக் கிடைக்கிறது. பல நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் தமிழன் ஆடை பெருமை பெற்றது" என்று சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து இலங்கை திரும்பிய திரு. பாலசுப்பிரமணியம் (பாலா) சுதந்திரன் நிருபரிடம் கூறினுர்.

அமெரிக்காவில் பிரபல அமெரிக்கன் பொது சுகாதாரச் சங்க மாநாடு நடைபெற்றபோது பல்வேறு நாட்டு பிரதிநிதிகள் 7000 பேர் அதில் கலந்து கொண்டார்கள். அங்கே இலங்கை



"பாலா"

யரான பாலசுப்பிரமணியம் ஒருவரே தமிழன் உடையில் தோன்றினுர். எல்லோரும் அவரை, அவர் உடுத்தியிருந்த உடையைப் பார்த்தார்கள். தமிழன் ஆடை எவ்வளவு அழகாக இருக்கிறது என்று வியந்தார்கள்.

இந்தத் தகவலைத் திரு பாலசுப்பிரமணியமே வெளியிட்டார்

ஸ்கலர்ஷிப்பில் [illegible]

திரு பாலசுப்பிரமணியம் இலங்கையில் சுகாதார இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றியவர். சுகாதாரப் போதனுசிரியர் பயிற்சிக்கு அமெரிக்காவில் உள்ள யேல் சர்வகலாசாலைக்கு அனுப்பப்பட்டவர். உபகாரச் சம்பளம் கொடுத்து அரசாங்கமே அவரை அனுப்பியது. அவர் படிப்பை முடித்துப் பட்டமும் பெற்றுக் கொண்டு இலங்கை திரும்பி இருக்கிருர். இப்போது (சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்கு பயிற்சியளிக்க) இலங்கையில் அவரை பொத்த தகுதியுடைய வேறு போதனுசிரியர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சிறப்பு

யேல் சர்வகலாசாலையில் பட்டப் படிப்பு மாணவர் குழுவுக்கு 'பாலா' தலைவராக இருந்தார். இந்தப் பதவி வகித்த காலத்தில் பல கூட்டங்கள், விருந்துகளை ஏற்பாடு செய்து பிரபல்யமடைந்தார்.

இன்னும் யேல் சர்வகலாசாலையில் சிலோன் சப்ஜெக்ட் பொக்ஸ் (Ceylon Subject Box) என்ற பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்தினுர். இதற்காகப் பலரின் பாராட்டைப் பெற்ருர். குறிப்பாக அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. ஆர். எஸ். எஸ். குண[illegible] ருர்.

ஆரோக்கியாமிர்தலேஹம்
S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET COLOMBO 13

## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவருமல் பெற்றுக் கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி 1183, கொழும்பு.
சர்குலேஷன் மனேஜர் சுதந்திரன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1960 நவம்பர் மாதம் 20-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.


## எதிர்ப்பதா? பணிவதா?

1961 ஜனவரி 1ந் தேதி உருவாகப்போகும் சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள் சிங்கள மொழியை விருப்போடு படிப்பதா? அல்லது 'நாம் ஒருபோதும் படிக்க மாட்டோம்' என்று வெறுப்போடு எதிர்ப்பதா?—இதில் எந்த வழியைக் கடைப்பிடிப்பது? தமிழ் பேசும் பொதுமக்களுக்கு முன்னுல்—முக்கியமாக தமிழ் அரசாங்க ஊழியருக்கு முன்னுல்—பூதாகாரமாக இன்று கிளம்பியிருக்கும் சிக்கல் நிரம்பிய ஒரு பிரச்சினை இதுவாகும்.

ஒவ்வொரு அரசாங்க இலாகாவிலும் உள்ள தமிழ் ஊழியர்களைச் சிங்களம் படிக்கச் செய்வதற்கு அரசாங்கம் எத்தனையோ வழிகளில் பிரயத்தனங்களை நடத்தி வருகிறது; மாயவலைகளை விரித்து வருகிறது.

நாளிலும் பொழுதிலும் அரசாங்க காரியாலயங்களில் சிங்களம் படிக்குமாறு சுற்றறிக்கைகள் சுற்றுப் பிரகாரம் வருகின்றன. தினந்தினம் பத்திரிகைகளில் தமிழ் அரசாங்க ஊழியர் சிங்களம் படிக்க வேண்டிய அவசியம் பற்றி அறிவுரைகளும், தெளிவுரைகளும் வெளிவருகின்றன. 'மூன்று வருடங்களில் சிங்களம் படிப்போம்' என்று கெடு வைத்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவோருக்கு உத்தியோக நியமனங்களும் கிடைக்கின்றன.

சில இலாகாத் தலைவர்கள் தன்மையாகப் புத்திமதி சொல்லியும், வேறுசில இலாகாத் தலைவர்கள் கட்டாயமாக வற்புறுத்தியும், இன்னும் சிலர் பயமுறுத்தியும் தமிழ் உத்தியோகஸ்தர்களைச் சிங்களம் படிக்கத் தூண்டி வருகிறார்கள்.

இந்த மிரட்டல் உருட்டல்களுக்கெல்லாம் ஈடு கொடுத்து எதிர்த்து நிற்கும் தமிழ் ஊழியர்களும் சிலர் இருக்கிறார்கள்; பணிந்து பலியாகிவிட்ட தமிழ் உத்தியோகஸ்தர்களும் பலர் இருக்கிறார்கள். இவர்களின் பட்டியல் நீண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

அதேசமயத்தில் எதிர்ப்பதா அன்றிப் பணிவதா என்பதில் ஸ்திரமான அபிப்பிராயம் ஒன்று உருவாகாமல் பலர் மயக்க நிலையிலிருந்து தத்தளிப்பதாகவும் தெரிகிறது. எனவே, இந்தப் பிரச்சினை நன்கு ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

ஒருவர் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் படிக்கலாம் விருப்போடு படித்து வற்பன்னராவதில் தவறு ஒன்றுமில்லை. பன்மொழிப் பாண்டித்தியம் யாருக்கும் பயன்படக்கூடியதே ஆனால் ஆட்சிபுரியும் ஒரு வேற்றின அரசாங்கம் நமது தாய்மொழியை, நமது கண் முன்னால் ஒரு அநியாயச் சட்டத்தின்மூலம் நசித்துவிட்டு, "எனது மொழியைக் கட்டாயமாகப் படித்து உத்தியோகம் செய், அதன்மூலம் வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேடு" என்று நம்மை ஒரு அடிமையாக நிலைத்து நிர்ப்பந்திக்கும்போது அந்த அரசாங்க கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அதன் மொழியை நாம் பயில்வது சுத்த கோழைத்தனம் என்பதோடு, அது தாய்த்திருநாட்டுக்கு, தாய்த்திருமொழிக்கு இழைக்கும் மாபெரும் துரோகமுமாகும்.

அதுமட்டுமல்ல, தமிழ் மொழியின் உரிமைக்காக, அரசியல் அந்தஸ்துக்காக ஒரு அரசியல் கட்சி ஆட்சியாளருடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டு, உரிமைப் போராட்டத்துக்குத் தோதான காலமும் கட்டமும் பார்த்துக்கொண்டு இயங்கி வருகையில், தமிழ் பேசும் மக்களில் சிலர் அக்கட்சியின் முயற்சிகளுக்கெல்லாம் அடி அத்திவாரத்திலேயே வேட்டு வைப்பதுபோல் நடந்துகொள்வது, வெண்ணெய் திரளும்போது தாழியை உடைத்துவிடும் செயலைப்போன்றதாகும்.

சிங்களம் படிப்பதன்மூலம் உத்தியோகத்தைப் பாதுகாத்துக்கொள்ளலாம் பதவி உயர்வுகளைத் தேடிக்கொள்ளலாம் என்று எண்ணுபவர்கள் சிலர் நம்மிடையே வாழும் அதேவேளையில், கட்டாயப்படுத்தினுல் சிங்களத்தைப் படிக்கவேமாட்டோம் என்று தலைநிமிர்ந்து நின்று சொல்லக்கூடியவர்களும் நம்மிடையே வாழ்வது கண்டு நாம் பெருமைப்படாமல் இருக்க முடியவில்லை.

புதிதாக நியமனம் பெறும் தமிழாசிரியர்கள் குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என்று கல்வி இலாகா ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டிருக்கிறதல்லவா? இந்தச் சுற்றறிக்கையை வாபஸ் பெறுமாறு கடந்த வாரம் கல்வி அமைச்சர் ஜனுப் பதியுத்தீன் மஹ்மூதைப் பேட்டி கண்ட அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தூதுகோஷ்டி கேட்டுக்கொண்டது.

அப்போது கல்வி அமைச்சர், "ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? தமிழாசிரியர்கள் சிங்களம் படித்தால் என்ன குறைந்து விடும்? பல பாஷைகள் தெரிந்திருப்பது கல்வி வளர்ச்சிக்கு நல்லது தானே!" என்று கூறினாராம்.

அதற்குத் தூதுகோஷ்டியில் சென்ற ஒரு தமிழாசிரியர் தக்க பதில் கொடுத்திருக்கிறார்: "எந்த மொழியைப் படிப்பதற்கும் எங்களுக்கு ஆட்சேபனை எதுவும் கிடையாது. ஆனால் எங்கள் சொந்த மொழியான தாய் மொழியைப் புறக்கணிக்கும் ஒரு அரசாங்கம், தனது மொழியை எம் மீது வலுக்கட்டாயமாகச் சுமத்தினுல் அதற்கு நாம் ஒருபோதும் பணிந்து கொடுக்கப் போவதில்லை. நிர்ப்பந்தித்து ஒரு மொழியைத் திணிப்பதை நாம் இறுதிவரை எதிர்த்தே தீருவோம், ஒருபோதும் படிக்க மாட்டோம்" என்று அந்த ஆசிரியர் கூறினாராம். சரியான பதில்! பாராட்டுகிறோம் அந்த ஆசிரியரை! பாராட்டுகிறோம் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தை! இந்தத்துணிச்சல் மற்றவர்களுக்கும் ஏற்படுமானுல 1961 ஜனவரி 1-ந் தேதியைப் பற்றித் தமிழர்களை விட அரசாங்கம் அல்லவா அதிகம் கவலை கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும்?

# ஜப்பான் பொதுத் தேர்தல்

## சோஷலிஸ்டு கட்சியின் வளரும் செல்வாக்கு

## ஆளுங்கட்சி மீளுமா? கொம்யுனிஸ்டு கட்சி தலைதூக்குமா?— இருபதாந்தேதி தெரியும்

> ஜப்பான் பொதுத் தேர்தல் இம்மாதம் 20ந் தேதி நடைபெறுகிறது. அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. ஜப்பான் தேர்தலில் உலக நாடுகள் பலவற்றின் கவனம் பதிந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**செ. குமாரசாமி**

பல நூற்றுண்டுக்காலமாக அடிமைப்பட்டிருந்த ஆசிய மக்களுக்குச் சுயமதிப்பு உணர்ச்சியை ஊட்டிய நாடு ஜப்பான். உலகனைத்துமுள்ள நல்லவற்றைத் தனதாக்கிப் பிரமிக்கத்தக்க வகையில் முன்னேறிய நாடு ஜப்பான். மேற்கத்திய எசமானர்களுக்கு எல்லாம் துணிந்து சவால் விட்ட நாடு ஜப்பான். அணுக்குண்டுப் பிரயோகத்தால் மடக்கப்பட்டு வீழ்ச்சியுற்றபோதிலும் மீண்டும் தலைதூக்கி உலகரங்கில் தலைநிமிர்ந்து நிற்கும் வீரமக்களின் தாய் நாடு ஜப்பான்.

எதையும் எளிதில் கிரகித்து தமதாக்கிக்கொள்ளும் இயல்புபடைத்த இம்மக்கள், தம்மைத் தோற்கடித்த அமெரிக்கா தமக்கு கற்பித்த ஜனநாயக கட்சி-அரசியல் முறையையும் ஒரு சில வருடங்களில் நன்ருய் புரிந்துகொண்டு பின்பற்றத் தொடங்கிவிட்டார்கள். கட்சி அரசியல்முறை இன்று நன்ருக ஸ்திரம் பெற்று இயங்கி வருகிறது இங்கே இம்மாதம் 20ந் தேதி பொதுத் தேர்தல நடைபெறுகிறது.

### கட்சி அரசியல் முறை ஆரம்பம்

1945ல் அமெரிக்கத் துருப்புகளிடம் சரணடைய முன்னரே, சுமார் 1875ம் ஆண்டளவிலேயே, ஜப்பானின் அரசியற் கட்சிகள் இயங்கி வந்திருக்கின்றன. ஆனால் ஏக சககராதிபத்தியம் செலுத்திய மன்னரும் அவரைச் சூழ்ந்திருந்த நிலப்பிரபுத்துவ சக்திகளும் அரசியல் கட்சிகளை நசுக்கப் பெரிதும் முயன்றன. கட்சிகளுள்ளும் ஊழல் மிகுந்திருந்தது. எனவே இவற்றின் பலம் குன்றி இராணுவ சக்திகள் பலம் பெற்று யுத்தப் பாதையில் நாட்டை இழுத்துச் சென்றன. 1937ல் சீனவுடன் யுத்தம் ஆரம்பமாகியதும் கட்சிகள் அனைத்தும் கலைந்து ஒருமுகமாக யுத்த விவகாரங்களுக்கு உதவியளித்தன சீனவுடன் யுத்தம் நீடித்துக்கொள்ளவே கட்சிகள் முற்ருகக் கருத்திழந்துவிட்டன இறுதியில் பிரிட்டன் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் ஜப்பான் யுத்தம் ஆரம்பிக்குந்தறுவாயில் இவை அனைத்தும் புதையுண்டோ, அரசாங்கத்தால் புதைக்கப்பட்டோ மறைந்தொழிந்தன. ஜனநாயக நாடுகளில் நடைமுறையிலிருக்கும் கட்சி அரசியல் முறை ஜப்பானில் ஆரம்பித்தது யுத்த முடிவிலேயாகும். அதற்கு முன்னர் மன்னர் அரசுபுரிந்தார்; தெய்வமென பூஜிக்கப்பட்டார்.

யுத்த முடிவில் (1945) ஜப்பானில் தோன்றிய கட்சிகளில் தேசியத்தன்மை பெற்றவை நான்கு—லிபரல் கட்சி (Jiyu-to), முன்னேற்றக் கட்சி (Shimpo-to), சோஷலிஸ்ட் கட்சி (Shakai-to), கம்யூனிஸ்ட் கட்சி (Kyosan-to) என்பன. இவற்றுள் முதலிரண்டும் பிற்போக்குச் சக்திகளின் பிரதிநிதிகள்; மற்ற இரண்டும் சீர்திருத்த சக்திகளின் குரல்கள்.

பத்து வருடங்களாக இக்கட்சிகளிடையே ஒட்டுகளும் பொருத்துகளும் பிளவுகளுமாக இருந்தது. அரசியற் சக்திகள் சீராக உருப்பெற்று இயங்காத ஆரம்ப நிலையில் இது நிகழ்வது இயல்பே. ஆனால் இப்பொழுது நிலைமை தெளிவாகிவிட்டது. பிற்போக்கும் முற்போக்கும் தெளிவாக உருவகம் பெற்றுவிட்டன. இங்குள்ள ஐக்கிய தேசியக் கட்சியைப்போன்று ஜப்பானில் முதலாளித்துவத்தின் பாதுகாவலனுக விளங்குகிறது லிபரல்-ஜனநாயகக் கட்சி (Jiyu—Minshu-to) இங்கிலாந்திலுள்ள தொழிற் கட்சியைப்போன்றது இன்றைய சோஷலிஸ்ட் கட்சி (Shakai-to).

லிபரல் கட்சி ஜனநாயகக் கட்சி என்ற இரண்டு கட்சிகளும் கூட்டுச் சேர்ந்ததன் விளைவாக 1955ல் தோன்றியது லிபரல்—ஜனநாயகக் கட்சி. ஏப்ரல் 1946ல் உலக யுத்தம் முடிந்ததும் நடந்த முதல் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றிபெற்றதும், தலைவர் ஹட்டோயாமா (Hatoyama) மந்திரி சபை நிறுவுந்தறுவாயில், ஜப்பானில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கத் துருப்புகளின் தளபதியால் விரும்பத்தகாதவர் எனத் தள்ளி வைக்கப்பட்டார். எனவே அக்கட்சியைச் சேர்ந்த யோஷிடா (Yoshida) பிரதமரானுர். சில வருடங்களின் பின் ஹட்டோயாமா தம்மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீங்கியதும் மீண்டும் லிபரல் கட்சியில் சேர்ந்தார் தலைவர் பதவியில் யோஷிடாவிற்கும் இவருக்குமிடையே ஏற்பட்ட அபிப்பிராயபேதத்தால் லிபரல் கட்சியிலிருந்து வெளியேறி ஜனநாயகக் கட்சியை அமைத்துக்கொண்டார். 1955ல் நிகழ்ந்த தேர்தலில் ஹட்டோயாமாவின ஜனநாயகக் கட்சி வெற்றிபெற்றது. பிரஸ்தாப கட்சிக்கும் லிபரல் கட்சிக்குமிடையே தேர்தலுக்கு முன்னர் இருந்தே ஆரம்பித்த பேச்சுவார்த்தைகளின பயனுக இரு கட்சிகளும் ஒன்று சேர்ந்து லிபரல்-ஜனநாயகக் கட்சியை நிறுவின. இன்று ஆட்சி புரியும் கட்சி இதுவே.

### பொதுக் கொள்கை

உள்நாட்டுக் கொள்கையில முதலாளித்துவத்தில் நம்பிக்கைகொண்டது. பிற்போக்குச் சக்திகளின் இந்தப் பிரதிநிதி. யுத்த முடிவில் ஜப்பானைத் தோற்கடித்த அமெரிக்க நாட்டின் செல்வாக்கிற்குட்பட்டிருந்ததினுல, இக்கட்சி அரசாங்கங்கள் சோவியத் யூனியனுடன் நெருங்கிப் பழக விரும்பவில்லை இருந்தும் இதன் ஸ்தாபகர்களிலொருவரான ஹட்டோயாமா பிரதமராயிருந்த காலத்தில் சோவியத் யூனியனுடன் ராஜீயத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார்; எனினும்செஞ்சீனவுடன் ராஜியத்தொடர்பு கொள்வதை கட்சி விரும்பவில்லை. இந்தக் கட்சியின் தலைவர் இன்று பிரதமராயிருக்கும் இகேடா (Ikeda) ஆவர்.

குறிப்பிட்ட வலதுசாரிக் கட்சி; இரு கட்சிகளின் ஐக்கியத்தால ஏற்பட்ட ஒன்று என்பதிலும் பார்க்க, ஆரம்பத்தில் ஒன்ருயிருந்து பிரிந்தவை மீண்டும் ஒன்று

[11-ம் பக்கம் பார்க்க]

# கத்தோலிக்கர் என்ருல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் திரு டி. எஸ். கே. வணசிங்கா கூறினுர். அதைக் கேட்ட பின்னர் தான், "அப்படியா, நல்லது" என்றுசொல்லிவிட்டு மந்திரி பதியுதீன் மஹ்மூத் விஷயத்துக்கு வந்தார்.

தமிழாசிரியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற சுற்றறிக்கையை வாபஸ் பெறுமாறு தூது கோஷ்டியினர் கேட்டபோது, "தமிழாசிரியர்கள் சிங்களம் படித்தால் நல்லதுதானே. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் படித்திருப்பதில் தவறில்லையே" என்றவாறு மந்திரி கூறினுர். அதற்கு ஆப்பு வைத்தாற் போலத் திரு. வணசிங்கா கூறிய பதில் மந்திரியாரைத் திகைக்க வைத்தது. அந்தப் பதில் பின் வருமாறு:—

### சிங்களம் படியோம்

"எந்த மொழியையப் படிப்பதற்கும் எங்களுக்கு ஆட்சேபனை எதுவும் கிடையாது ஆனல் எங்கள் சொந்த மொழியான தாய் மொழியைப் புறக்கணிக்கும் ஒரு அரசாங்கம், தனது மொழியை எம்மீது வலுக் கட்டாயமாகச் சுமத்தினுல் அதற்கு நாம் ஒருபோதும் பணிந்து கொடுக்கப் போவதில்லை நிர்ப்பந்தித்து ஒரு மொழியைத் திணிப்பதை நாம இறுதிவரை எதிர்த்தே தீருவோம் ஒரு போதும படிக்கமாட்டோம்."

"உங்களில் கத்தோலிக்கர்கள் யாராவது இருக்கிறீர்களா" என்று கேட்ட கல்வி மந்திரிக்கு கத்தோலிக்கரான திரு. வணசிங்கா கொடுத்த சூடான பதில் இது.

### வனத்தமுல்லை விவகாரம்

சமீபத்தில் கத்தோலிக்கர்களைப் புண்படுத்திய சம்பவங்களுள் பிறிதொன்று வனத்தமுல்லையில் ஆஸ்பத்திரி, பெரிய கல்லூரி- இவற்றிற்காகக் கத்தோலிக்க திருச்சபை வைத்திருந்த இடத்தை அரசாங்கம சுவீகரித்ததாகும்.

தற்போது கத்தோலிக்க மாணவர்கள் அரசாங்க நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவிககு முகமாக பாடசாலைகளுக்குக் கறுத்தப பட்டிகள் அணிந்து செல்கிருர்கள். அரசாங்க அலுவலகங்களிலோ கத்தோலிக்கர்கள் அலட்சியப் படுத்தப்படுகிருர்கள். இந்த ஆபத்தான நிலைமை வளர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தச்சுவேலை, ஓவிய வகுப்புகள் இன்னும் தொடங்கப்படாதது ஏன்?

## யாழ் தொழில் நுட்பக் கல்லூரி சம்பந்தமாகப் பொதுமக்கள் கேள்வி

யாழ்ப்பாணம் நவ. 16—

யாழ்ப்பாணம் அரசினர் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் தச்சு வேலை, ஓவியம் என்பனவற்றுக்கான போதனாசிரியர்கள் கடந்த ஒரு வருடத்துக்கு முன்பே நியமிக்கப்பட்டுள்ளனராயினும் அவர்களுக்கான மேற்கண்ட இரு வகுப்புகளும் இதுவரை ஆரம்பிக்கப்படவேயில்லை. மேற்படி வகுப்புகள் அடுத்த ஆண்டு நடுப் பகுதியில் தொடங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்புகள் ஆரம்பமாவதற்கு ஒன்றரை வருடத்துக்கு முன் அங்கு நியமனம் பெற்றுவிட்ட அந்தப் போதனாசிரியர்களிருவரும் தாங்கள் விசேஷ தகுதியெதுவும் பெருத வர்த்தகக் கணக்குப் பாடம் படிப்பிப்பதில் ஈடுபட்டுக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கின்றனர். சாதாரணமாக ஒரு போதனாசிரியர் வாரத்தில் 20 மணித்தியாலம் படிப்பிக்க வேண்டுமென்பது நடைமுறை ஒழுங்காக இருந்துங்கூட இந்த ஆசிரியர்களுக்கு வாரத்தில் மூன்று மணி நேரம் மட்டுமே அவர்களுக்குச் சம்பந்தா சம்பந்தமில்லாத வேலையொன்றைச் செய்ய வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் வேண்டாவெறுப்பான போக்கினால் பிரஸ்தாப போதனாசிரியர்கள் இருவரும் வீண் பொழுதுபோக்க வேண்டியதாயிருப்பது ஒரு வகையில் கல்லூரி நிர்வாக ஒழுங்குகளுக்குக் குந்தகம் விளைவிப்பதாகவும் சொல்லிக்கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் இதுபற்றிக் கிளர்ச்சி செய்யலாம் என்றும் நம்பப்படுகிறது.

## தமிழில் கையொப்பம் வைத்தவருக்கு சம்பளம் இல்லை

### யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் மேலதிகாரி செய்த வேலை

தமிழ் அரசாங்க ஊழியர் ஒருவர் தமது சம்பளப் பத்திரத்தில் தமிழிலே கையொப்ப மிட்டு விட்டாரென்பதற்காக தமிழரான அவரது மேலதிகாரி பணம் வழங்காது அப்பத்திரத்தைத் திருப்பியனுப்பி விட்டார். ஆங்கிலத்தில் கையொப்ப மிட்டாலதான் அவருக்குப் பணம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

வல்வெட்டித்துறை தபால் நிலையத்தைச் சேர்ந்த இ. சி. வேலும் மயிலும் என்ற அந்த தந்திச் சேவகர் தபாற் பகுதியின் வட பெரும்பாக அத்தியட்சகரிடமிருந்து திரும்பி வந்த சம்பளப் பத்திரத்தில் தமது தமிழ்க் கையொப்பத்துக்கு அருகில் ஆங்கிலக் கையொபபத்தையும் போட்டு அனுப்பியிருக்கிறார்.

மொழிப் பிரச்சினைக்குள்ளான அந்தச் சம்பளப் பத்திரத்திலுள்ள தொகை மேலதிக நேர வேலைக்கான 48 சதமேயாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### தமிழ்ப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாக அதில் நம்பிக்கை இழந்ததோடு அதிருப்தியும் அடைந்த தமிழ் பேசும் உறுப்பினர்கள் கூட்டம்கூட்டமாக ராஜினுமாச் செய்து வருகிறார்கள். ஸ்டேஷன் மாஸ்டர்கள் சங்கத்தில் உள்ள 1105 உறுப்பினர்களில் சுமார் அரைவாசிப் பேர் தமிழ் பேசுபவராவர். ராஜினுமாச் செய்துகொண்ட தமிழ் பேசும் உறுப்பினர்கள் தமக்கெனத் தனிச் சங்கம் அமைக்க முயற்சி செய்து வருகிறார்கள்.

# நிர்வாக ஊழல்களை ஒழிக்க இப்போதுதான் வழி பிறக்கிறது

## யாழ் மாநகரமன்றத் தேர்தல் குறித்து டாக்டர் நாகநாதன்

யாழ் மாநகர மன்றத்துக்கான தேர்தல் கொள்கை அடிப்படையில் நடப்பதால் நிர்வாக ஊழல்களை ஒழிக்க இப்போதுதான் வழிபிறக்கிறது என்று சொல்லத் தோன்றுகிறது என்று டாக்டர் நாகநாதன் கூறினர்.

டிசம்பர் 10ந் தேதி நடைபெற இருக்கும் யாழ் மாநகர மன்றத் தேர்தலில் அரசியற் கட்சிகள் முதன் முறையாக இறங்கியிருப்பது குறித்து உங்கள்கருத்து என்ன என்று சுதந்திரன் நிருபர் டாக்டர் நாகநாதனைக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:—

### ஊழலுக்கு முற்றுப்புள்ளி

"இதுவரை நிகழ்ந்து வந்த உள்ளூராட்சி நிர்வாகம் எதுவும் கொள்கை அடிப்படையில் நடந்ததில்லை. தனிப்பட்டவர்களின் தலைமைப் பதவியைச் சுற்றியே தெரிவுகள் நடைபெற்றன! இந்த நிலைமையை மாற்றி வைக்க வேண்டும்; கொள்கை அடிப்படையில் நிர்வாகம் நடைபெற வேண்டும்; அப்பொழுதுதான் இன்றுள்ள ஊழல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும்"

### தமிழரசுக் கட்சியின் போட்டி

தமிழரசுக் கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பங்குபற்றுவதன் காரணம் என்ன என்று கேட்டபோது அவர் சொன்னர்:—

மூலைக்கு மூலை இருக்கும் பற்பல தனிப்பட்ட அங்கத்தவர்களின் வாக்குகளைப் பெறும் முயற்சியில் பலதரப்பட்ட அங்கத்தவர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், நேர்மையான நிர்வாகம் புரிவது கஷ்டம். மேலும் பிரதேச சபைகள் அமைக்கப்படும்பொழுது உள்ளூராட்சி மன்றங்களில் தமிழரசுக் கட்சி கூடிய கரிசனை எடுக்காதிருக்க முடியாது அல்லவா?"—இவ்வாறு டாக்டர் நாகநாதன் கூறினர்.

### 15 வட்டாரங்களில் 45 பேர் போட்டி

மாநகர மன்றத் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 8ந் தேதி தாக்கல் செய்யப்பட்டது தெரிந்ததே.

தமிழரசுக் கட்சி அபேட்சகர்களாக எட்டுப் பேர் போட்டியிடுகிறார்கள். சமசமாஜக் கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் இவ்விரண்டு அபேட்சகர்களை நிறுத்தியுள்ளன.

தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஆறு பேர் போட்டியிடுகிறார்கள்.

தற்பொழுது அங்கத்தவர்களாயிருப்பவர்களில் நாலு பேர் மீண்டும் தேர்தலுக்கு நிற்கவில்லை. இந்நால்வரில் மாநகர மன்றத் தலைவர் திரு காசிப்பிள்ளையும் ஒருவர்

15 வட்டாரங்களிலும் மொத்தம் 45 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்



### டில்லி செல்லும் கூட்டுறவாளர்

திருகோணமலை திரு எம். கே. சங்கரதாஸ் புதுடில்லியில் நடைபெறும் கூட்டுறவுத் தலைமை மாநாட்டுக்கு இலங்கை கூட்டுறவு இயக்கப் பிரதிநிதியாக அனுப்பப்படுகிறார். இந்த மாநாடு இம்மாதம் 27ந் தேதிவரை நடைபெறும். சர்வதேசக் கூட்டுறவு இணைப்பு ஸ்தாபனம் இதை ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு சங்கரதாஸ் திருமலை வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராவர். திருமலை பலநோக்குக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் சமாஜத்தின் உபதலைவராகவும் இவர் இருக்கிறார். [illegible] திருமலை வட்டார கூட்டுறவுச் சங்கத்தில் இயக்குநருமாவர்.

### சிவயோக சமாசம்

சிவயோக சமாச அனுதைக் குழந்தைகளில்லத்தின் ஆண்டு விழா கடந்த 22—10—60ல் திருமலை மாவட்ட நீதிபதி திரு எஸ். எம். அப்துல் காதர் தலைமையில் கொண்டாடப்பட்டது. சைவப்புலவர் வடிவேலு நன்றி நவின்ருர்.






...ஓர்
உஷா
தையல் மெஷினையே.
சோல் ஏஜென்டுகள்:
ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்
88A, மெயின் வீதி,
கொழும்பு.
டெலிபோன்: 5060.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் ஒரு பெண்!

சிறுகதை — எழுதியவர்: உதயணன்

ஒரு வெண் முகில் நெளிந்து துவண்டு ஆகாயப் பெரு வெளியில் மிதந்தது. அதை நோக்கி ஆவலோடு நீந்தியோடி வந்த ஒரு கருமுகில் அதைத் தழுவி அணைத்துக் கொண்டு நகர்ந்தது. கணவன் அடிச்சுவட்டைப் பார்த்து நடக்கும் பத்தினிப் பெண் போல அந்த வெண் முகில் கருமுகிலைத் தொடர்ந்தது.

அந்தக் குட்டிச் சுவர் மீது ஒரு காலை நீட்டி ஒரு காலை மடக்கிச் சௌகரிமாக அமர்ந்திருந்த நான் இந்தக் காட்சியைக் கண்டு மெய் மறந்திருந்த சமயம்—

மலர் இதழ்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி அடுக்கிச் செய்தன போன்ற ஒரு சோடி மென்மையான கரங்கள் என் கண்களைப் பின்னிலிருந்து பொத்தின. அதைத் தொடர்ந்து எழுந்த வளையல் ஒலியை சிங்காரச் சிரிப்பொலி ஒன்று அமுக்கிக் கொன்றது.

யாரது?

அந்த இரு கைகளையும் எனது இரு கரங்களாலும் பற்றி அவற்றைத் தலைக்கு மேலாகத் தூக்கித் திரும்பினேன். ஆழ்ந்து உறங்கிப் போய்க் கிடந்த எனது உணர்ச்சி நரம்புகள் புடைத்தெழுந்து அசுர வேகத்தில் இயங்கின. எனது உடலின் ஒவ்வொரு அங்கமும் கிளர்த்து எழுந்தது.

யாரது?

ஒரு தென்னோலைக் கீற்றின் இடைவெளியால் தவழ்ந்து வந்த நிலாக்கொழுந்து அவளுடைய வண்ணத் திருமுகத்தில் ஒளிக் கோடுகளை வரைந்து, ஒரு மலரின் நிழல் எடுத்து நிரஞ்சன நிடாலத்தில் பூச்சூடி நின்றது.

இப்படியான ஒரு நேரத்தில், சூழலில், சந்தர்ப்பத்தில் மனக்கட்டுப்பாடில்லாத எந்த ஆண் மகனும் எப்படி நடந்து கொள்ளுவானோ, அந்த வழியே போவென்று சிந்திக்க அவகாசம் கிடையாத எனது சிரழிந்த புத்தி சொன்னது.

"தேவகி...!" என்றேன்.

எனது உயிரிழந்த மெல்லிய குரலைக் கேட்டாளோ இல்லையோ, திரும்பிய வேகத்தில் நிலவொளியில் எனது முகத்தைக் கண்டாளோ இல்லையோ, எனது நடுங்கும் கரங்களின் ஸ்பரிசத்தை உணர்ந்தாளோ இல்லையோ, அவள்—

மாறுபட்டாள்!

தனது கைகளைப் பறித்துக் கொண்டாள். ஒரு கண நேரம் என்னை உற்று நோக்கினாள். திரும்பினாள். நடந்தாள். போனாள். போய் விட்டாள்.

தேவகி! உன்னை நான் வந்து அழைத்தேனா? அவ்வப் பொழுது உனது மோகன வடிவம் என்னைக் கூறு போட்டுக் குதறிய பொழுதுகூட நான் நானாகவே இருந்தேன். இன்று, இப்பொழுது, இங்கு நீ நீயாக வந்தாய். வென்றாய். கொன்றாய். போகிறாயா? போ!

வானத்தைத் திருப்பிப் பார்த்தேன். கருமுகிலையும் காணவில்லை. வெண் முகிலையும் காணவில்லை. கருமுகில் அந்தப் பெருமுகிலின் மடியில் மறைந்திருக்கலாம். வெண் முகிலும் பெரு முகிலின் அந்தரேணத்தில் நுழைந்து சிதைந்து ஒழிந்து விட்டதோ?

●

ஒரு உத்தியோகம் இருப்பதுதான் ஆண்களுக்கு அழகு என்று சொல்லுவார்கள். அழகு மட்டுமன்றி அந்தஸ்தையும் தருவது அதுதான். இந்த இரண்டையுமே வேண்டாம் என்று உதறிவிட்டாலும் கூட இன்னொன்று மிஞ்சி நிற்கும்—

வெறும் வயிறு!

அதனால் நான் கண்டியில் ஒரு பாடசாலையில் ஆசிரியனாக இருந்தேன். எனக்கு வசதியாகக் கடையிலும் விடுதியிலும் எத்தனையோ இடங்கள் இருந்தும், நான் வெளியே எங்கேயும் தங்குவதைக் கனகலிங்கம் விரும்பவில்லை.

கனகலிங்கம் எனது உற்றம் சுற்றம் வழியால் அரைகுறையாக அறிமுகப்பட்டவர். கண்டியில் ஒரு பெரிய வியாபாரி. கண்டிக்கு வந்ததும் அவர்தான் எனக்குத் தைரியம் தந்த அறிமுகமான முதல் மனிதர். அவருக்கு எனது போக்கும் வரத்தும் பிடித்திருந்ததோ என்னவோ, எனக்கு அவருடைய சாந்த குணமும் அமைதியான வாழ்க்கையும் மிக மிகப் பிடித்திருந்தன. அதனால் அவர் எதைச் சொன்னாலும் அதைத் தட்டிப்பேச எனக்குத் துணிச்சல் வராது. அதனால் அவருடைய வீட்டிலேயே குடிபுக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அவருடைய வீட்டில் அவரையும் அவருடைய மனைவியையும் தவிர, அவர்களுடைய மகள் தேவகியும் இருந்தாள்.

இருந்தால் எனக்கென்ன?

ஒரு பெண் நினைத்திருந்தாளாம் அகில உலகத்திலேயும் தான்தான் ஒரே ஒரு பெண்மயில் என்று. ஒரு ஆண் நினைத்திருந்தானும் அகில உலகத்திலேயும் தான் தான் ஒரு அருச்சுன மகாராசாவென்று. தேவகி தன்னைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டாளோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் அப்படி எதுவும் நினைத்திருக்கவில்லை. நினைக்க முடியவில்லை. நினைக்க அவசியம் ஏற்படவில்லை. நினைத்தும் ஆகப்போகிறது ஒன்றுமில்லை.

நாளும் நடந்தது. கோளும் நடந்தது. ஊழும் நடந்தது. பாழும் புவியும் நடந்தது. இவற்றைப் பற்றி வாழும் மனித மந்தையும் நடந்தது.

எல்லோருடனும் அன்பாய் இருக்கவேண்டும், நாணயமாய் நடக்க வேண்டும். நல்லவனாய்ப் பழக வேண்டும் என்று சொல்லுவார்கள். அப்படி நடப்பதிலும் ஒரு சங்கடம் இருப்பதாகவே தோன்றியது. எல்லோருடைய பிரியத்துக்கும் ஆளாகி விட்டால்—பாசக் கயிறு பலமாகப் பிணைத்துக் கொண்டால்—பிறகு, பிறகு, பிறகுதான்!

காலையில் எழுந்து பாடசாலைக்குப் போகும் பொழுது, "சோமசுந்தரம்! இன்றைக்கு என்ன சமையல் செய்தால் உங்களுக்குப் பிடிக்கும்?" என்று தேவகியின் தாயார் கேட்பாள்.

"சோமசுந்தரம்! இன்றைக்கு மாலையில் எங்கேயும் போகாமல் இருங்கள். உங்களுடன் ஒரு விஷயம் பேச வேண்டும்" என்பார் கனகலிங்கம். அவருக்கு நான் மந்திரியைப் போல வென்றால், அவருடைய மனைவிக்கு நான் பிள்ளையைப் போல வென்றால் அவர்களுடைய மகள் தேவகிக்கு—

ஆமாம் தேவகிக்கு?

நான் அந்த வீட்டுக்குப் போன புதிதில் தேவகி அவ்வளவு எளிதாக வந்து நெருங்கிப் பழகவில்லை. ஒரு நாள் நான் பாடசாலை முடிந்து வந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தேன். தேவகி தயங்கித் தயங்கி வந்து மேசையில் இருந்த சீப்பை எடுத்துக் கொண்டு போனாள்.

அந்தச் சீப்பு இந்த மேசைக்கு வந்திருக்க வேண்டிய அவசியமேயில்லை. சந்தர்ப்பங்கள் நமக்காகக் காத்திருப்பதில்லை. நாமாகத்தான் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று யாரோ சொன்னதை இவள் 'அமுல்' நடத்தப் பார்க்கிறாளோ?

நான் ஒரு முடிவுக்கு வருமுன்னர் அவள் திரும்பி வந்து சீப்பை மேசையில் வைத்து விட்டுப் போனாள். அவள் முதல் முறை வந்ததற்கும் இரண்டாவதுமுறை வந்ததற்கும் இடைப்பட்ட குறுகிய நேரத்தில் அந்தச் சீப்பைக் கொண்டு அவள் ஒரு வழுக்கைத் தலையைக் கூட வாரிவிட்டிருக்க முடியாது. ஆகையால் நான் எண்ணியது சரிதானா?

தேவகி மூன்றாம் முறையாக வந்து......வந்து......வந்தாள் நான் சிரத்தையில்லாதவன் போல பத்திரிகைப் படித்துக் கொண்டிருந்தேன்.

"அந்தப் பத்தாம் பக்கத்தைத் தருகிறீர்களா?" என்று கேட்டாள். நான் நிமிர்ந்து பார்த்தேன்.

எங்கேயிருந்தாலும் யாரிடம் இருந்தாலும் அழகை அழகென்றுதான் சொல்ல வேண்டும். பருவத்தால் பொலிவுற்று, இளமையால் எழிலுற்று, அழகினால் அரண் பெற்ற அவளுடைய சுந்தர வடிவை அங்கமங்கமாக வர்ணித்தால்தான் வர்ணித்ததாகும். மனச்சாட்சி தடுக்கிறது விட்டுவிடுகிறேன்.

"என்ன, பத்தாம் பக்கமா? கதை படிக்கப் போகிறீர்களாக்கும்" என்று சிரித்தபடியே அந்தப் பக்கத்தை இழுத்துக் கொடுத்தேன். வாங்கிக் கொண்டாள். பத்திரிகையை மட்டும்தானே கொடுத்தேன்; பத்திரிகையை மட்டும்—தானே வாங்கிக் கொண்டாள்.

அன்று கனகலிங்கமும் மனைவியும் ஒரு கல்யாணத்துக்கும் போகவேண்டியிருந்தது. அவர்களை அழைத்துப் போய் வழியனுப்பி விட்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

முன் கதவு சும்மா மூடப்பட்டிருந்தது. நான் விரைந்து போய் கதவைத் தள்ளித் திறந்ததும் உள்ளிருந்து கதவைத் திறக்க வந்த தேவகியின் நெற்றியில் கதவு போய் இடித்துக் கொண்டதும் கண நேரத்தில் நிகழ்ந்தன. கதவின் விளிம்பு தேவகியின் நெற்றியில் எதிர்பாராத விதமாகப் பலமாக அடித்து விட்டதால், அவள் முகத்தைப் பொத்திக்கொண்டு தடுமாறி விழப் போனாள்.

நான் அவளைப் பிடித்துப் பக்கத்து நாற்காலியில் உட்கார வைத்தேன். பார்த்துக் கொண்டு நிற்கும் பொழுதே நெற்றி சுள் சுள்ளென்று வீங்கிக்கொண்டு வந்தது. அவளை நாற்காலியோடு சாயவைத்து உள்ளங்கையால் நெற்றியை அழுத்தித் தேய்த்து விட்டேன்.

"தெரியாமல் நடந்து விட்டது. அதெல்லாம் ஆறிவிடும்" என்று கூறினேன். நான் செய்தது என்னவோ சின்னத்தவறுதான் என்ற பாணியில்.

அவள் எழுந்து நின்று என்னை நிமிர்ந்துபார்த்தாள். அவளுடைய முகம் குப்பென்று சிவந்து போயிற்று. அவளுடைய உதட்டில் ஒரு நாணப் புன்னகை பூத்துப் பொலிந்தது. தலையைச் சரித்து என்னைப் பார்த்தாளே — ஆமாம், பார்த்தாளே..............!

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவள் என்னை ஒரு அன்னியன் என்பதையே மறந்து விட்டாள் போலிருந்தது. சதா என்னருகில் வந்து பேசிக்கொண்டேயிருப்பாள்—பேசத் தூண்டிக்கொண்டே இருப்பாள். எப்பொழுதாவது நான் வீட்டுக்கு வரத் தாமதித்தால் கோபப்படுவாள்—கவலைப் படுவாள்—கண் கலங்குவாள்.

என்னைப் பொறுத்தவரையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டு வந்ததை நான் அவதானித்தேன். பாடசாலை விட்டதும் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு விரைகிறேன். தெரு முனையில் திரும்பியதும் தூரத்தில் கண்களைச் சுழற்றி விட்டு வாசலில் அவள் எனக்காகக் காத்திருக்கிறாளா என்று தேடுகிறேன்.........!

ஏன்?

அவள் யார்? நான் யார்? அவள் ஏன் என்னைப் பார்க்க வேண்டும்? ஏன் அவளைக் காணாத சமயம் என் மனதில் அப்படி ஒரு வெறுமை கவிய வேண்டும்?

ஆனால்—

நான் அவளைக் காதலிக்கவில்லை. எனக்கு அவளை, அவளுடைய குடும்ப நிலையைத் தெரியும். எனவே அவளும் என்னைக்காதலித்திருக்கமுடியாது. அப்படியென்றால் எங்கள் இருவருக்கும் இடையில் ஏதோ ஒரு 'உறவு' கிடந்து துடித்து ஊசலாடுகிறதே, அதற்கு என்ன பெயர்? அந்த உறவை என்னவென்று அழைப்பது?

சில சமயங்கள் தேவகி சேலை கட்டி, பாம்புப் பிணையல் போல பின்னல் போட்டு கவர்ச்சியாக அலங்கரித்துக் கொண்டு, என் எதிரே வந்து நின்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசினால் எனது மனம் தடம் புரண்டு போவதுண்டு. அப்பொழுதெல்லாம் எனது மனதைக் கட்டுப்பாடு என்ற கயிறு போட்டு வரிந்து கட்டிவிடப் பிரயத்தனப் படுவேன். ஏனென்றால் நான் அவளைக்—

காதலிக்கவில்லை!

அப்படியிருக்கதேவகி இப்பொழுது வந்ததற்கும், எனது கண்களை மூடியதற்கும், திரும்பிச் சென்றதற்கும் என்ன அர்த்தம்?

●

ஒரு மழைத்துளி பட்டென்று எனது தோள்பட்டையில் விழுந்தது. நான் குட்டிச் சுவரில் இருந்து கீழே குதித்தேன்.

"சோமசுந்தரம்!" என்ற ஒரு குரல் எனது இதயத்தில் மோதி முட்டியது. யாரது? தேவகிதான் மீண்டும் வருகிறாளா?

இல்லை. அங்கு வந்தவர் கனகலிங்கம். அவர் என்னை நெருங்கி, "சோமு! எங்கேயெல்லாம் உங்களைத் தேடுகிறேன். உங்களுடன் ஒரு விஷயம் ஆலோசிக்க வேண்டும்" என்றார்.

"என்ன......?"

"தேவகிக்குக் கல்யாணம்......!" என்று இழுத்து நிறுத்தினார்.

"நடக்கவேண்டியதுதான்; சொல்லுங்கள்."

"எனது அக்காவின் குடும்பத்தினர் கொழும்பில் இருக்கிறார்கள். அவர்களுடைய மகன்தான் தேவகியைக் கட்டிக் கொள்ளப் போகிறான். கல்யாணத்துக்குத் தேதி கூட வைத்து விட்டோம். ஆனால்—"

"ஆனால்"?

"அவர்களுக்கு இங்கு வர வசதியில்லையாம். நாங்களே போய் அங்கே கல்யாணத்தை முடித்துத் தேவகியை

(15-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன் மால்ஸ்,

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் என்றால் அது காலத்தின் கண்ணாடி

## மனித வாழ்க்கையைச் சீர்படுத்த உதவுகிறது

## பாமரருக்கு மட்டும் படைத்தால் போதாது படித்தவர்களுக்கும் தரத்திற்கேற்றது தேவை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

### இலக்கியம் என்றால் என்ன?

"இலக்கியம் என்பது மனித வாழ்க்கையின் கலையுருவம்" என்று பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ் மக்களின் வரலாறு பண்டைக் காலத்தில் எப்படி ஓங்கி உயர்ந்து பெரும் புகழ் பெற்று நின்றது என்பதையும், இடைக்காலத்தில் அது எப்படித் துவண்டு, நலிந்து வீழ்ச்சியுற்றது என்பதையும், மீண்டும் அது எப்படித் தலை தூக்கத் துவங்கியிருக்கிறது என்பதையும் தொல்காப்பியனார் காலத்திலிருந்து புரட்சிக் கவிஞரின் காலம் வரையில் கிடைத்துள்ள தமிழ் இலக்கியங்களைப் புரட்டிப் பார்த்தால் மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இலக்கியம் காலத்தைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாக இருப்பது மட்டுமல்லாமல், மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்த அது பெரிதும் பயன்படுகிறது. அது நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்க்க உறுதுணையாக இருக்கிறது. உள்ளத்திற்கு இன்பம் ஊட்டி, பொழுது போக்குவதற்குப் பெரிதும் பயன்படுகிறது. சென்ற காலத்தைச் சுட்டிக்காட்டி வருங்காலத்தைத் திட்டிக் காட்ட இலக்கியம் சிறந்ததொரு கருவியாக இருந்து வருகிறது. இப்படிப்பட்ட இலக்கியத்தின் பயன்களை எல்லாம் தமிழ் இலக்கியங்கள் வாரி வாரி வழங்குகின்றன.

### தூய தமிழ் இலக்கியம்

தமிழகத்தின் எல்லாத் துறைகளிலும், எல்லா இடங்களிலும் தாய்மொழியான தமிழின் மணங்கமழ வேண்டும் என்று மக்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கும் காலம் இது. இந்தக் காலத்தில் தமிழ் எழுத்தாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன. தமிழ்ப் பெருங்குடி மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பு அளித்தது. அவர்களின் ஆவலை நிறைவேற்றுகின்ற வழியில் பல்வேறு வகையான கலையியற் சொற்களையும், அறிவியற் சொற்களையும் தூய தமிழில் கண்டு பிடித்துத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அவற்றை வழக்காற்றில் கொண்டுவர வேண்டிய பெரும் பொறுப்பு தமிழ் எழுத்தாளர்களைச் சார்ந்ததாகும்.

### எது வெறித்தனம்?

தமிழைத் தமிழாக எழுதுவதா அல்லது பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதுவதா என்பது பற்றி எழுத்தாளர்களிடையே கருத்து வேறுபாடு எழுந்திருப்பது வியப்புக்குரியதாகும். தமிழ் தமிழாக இருக்கட்டும் என்று கூறுபவர்களைப் பார்த்து மற்றவர்கள் தமிழ் வெறி பிடித்தவர்கள் என்று குறை கூறுகிறார்கள். எதற்குப் பெயர் வெறி? தமிழைத் தமிழாக இருக்கவிடமாட்டேன். பிறமொழிச் சொற்களைவேண்டுமென்றே கலந்தே தீருவேன் என்று வாதாடுவது வெறித்தனமா? அல்லது தமிழ் தமிழாகவே இருக்கட்டும் என்று விரும்புவது வெறித்தனமா? அரிசி அரிசியாக இருக்கட்டும் என்று கூறுவது வெறித்தனமா? அல்லது அரிசியில் கல்லையும், கட்டியையும், உளுந்தையும், பயற்றையும் கலந்துதான் தீருவேன் என்பது வெறித்தனமா? அரிசியிலிருந்து உளுந்தையும், பயற்றையும், கல்லையும், முள்ளையும் கொழித்து எடுத்து அரிசியை அரிசியாக ஆக்குவீர் என்பதா தவறு? தமிழ் தமிழாக இருக்க வேண்டும் என்று கூறுவது பற்றின் அறிகுறியே தவிர, எப்படி வெறித்தனம் ஆகும்? ஆங்கிலத்திலோ, அல்லது வடமொழியிலோ, அல்லது இந்தியிலோ தமிழ்ச்சொற்களை நான் சேர்த்துப் பேசியே தீருவேன் என்று கூறினால், அது வேண்டுமானால் வெறித்தனம் ஆகும். அதுபோல தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்த்தே திரவேண்டும் என்பது வேண்டுமானால் வெறித்தனம் ஆகுமேயல்லாமல், தமிழ் தமிழாக இருக்க வேண்டும் என்பது வெறித்தனம் ஆகாது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தாய்மொழிப் பற்றோடு பாரதியார் பாடுவதை யாரேனும் வெறித்தனம் என்று கூற முடியுமா? பாரதியார் வேண்டாத மொழி வெறி பிடித்தவர் என்று யாரேனும் சொல்லுவார்களா?

### இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்

தமிழைத் தமிழாக எழுத முடியாதவர்கள் அப்படி எழுத மெல்ல மெல்ல முயலவேண்டுமே யொழிய எழுதத் தெரிந்தவர்கள் தங்கள் நிலைக்கு இறங்கி வந்து, கலப்பு மொழித் தமிழை எழுத வேண்டும் என்று வற்புறுத்துவது அறிவுக் குறையுடைய செயலாகும்.

கடைத் தெருவில் நடமாடும் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளுகிற அளவில், தமிழ் இலக்கியம், எளிமையாக இருக்க வேண்டுமேயல்லாமல், சங்க இலக்கியங்களைப்போல கடுமையானவையாக ஒருபோதும் இருக்கக் கூடாது என்று ஒரு சிலர் வற்புறுத்தி வருகிறார்கள். சாதாரண மக்களும் புரிந்து கொள்கிற வகையில் இலக்கியங்கள் தோன்றுவது தவறல்ல; தோன்றக்கூடாது என்று கூறுபவர்கள் யாருமிருக்க மாட்டார்கள்; ஆனால் சொற்செறிவும், பொருளாழமும், நயமேம்பாடும் கொண்ட சிறந்த இலக்கியங்கள் தோன்றவே கூடாது என்று கூறுவது அறியாமையின்பாற் பட்டதாகும். இரண்டாவது வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற பாடப் புத்தகங்கள் இருக்கத்தான் வேண்டும்; அதுபோல பத்தாவது வகுப்பு மாணவர்களுக்கும் அவர்களுக்கு ஏற்ற பாடப்புத்தகங்கள் இருக்கத்தான் வேண்டும். இரண்டாவது வகுப்புப் பாடப் புத்தகங்களைப் போலவேதான் எல்லாப் பாடப் புத்தகங்களும் இருக்க வேண்டும் என்று கூறினால் அது எவ்வளவு அறியாமையுடையதோ அவ்வளவு அறியாமையுடையது, இலக்கியங்களெல்லாம் பாமரமக்கள் புரிந்து கொள்ளுகிற மாதிரியில் இருக்க வேண்டும் என்று கூறுவதும்.

### காலம் தீர்மானிக்கும்

இலக்கியங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நாம் வரையறுக்க முடியாது; வரையறுக்கவும் கூடாது. இலக்கியத்தைப் படைக்கும் எழுத்தாளர்கள் எப்படி வேண்டுமானாலும் படைக்கட்டும்; ஆனால் அவற்றில் எவை நல்லவை, எவை நல்லவையல்லாதவை என்பதை மக்கள் மன்றமும், காலமும் தீர்ப்பளித்துக் கொள்ளும். காலந்தான் சிறந்த இலக்கியங்களையும், அழியாப் பெரும் புகழ் படைத்த இலக்கியங்களையும் தேர்ந்தெடுத்து, வருங்கால மக்கள் கையிலே வைக்கின்றது. காடுகளில் பல்வேறு வகையான மரஞ்செடி கொடிகள் வளர்ந்தாலும், அவற்றில் தேவையானவற்றையும், நல்லனவாக இருப்பனவற்றையும் எவ்வாறு மக்கள் வெட்டி எடுத்துக் கொண்டு, பிறவற்றைக் கழித்து ஒதுக்கி விடுகிறார்களோ, அதுபோல மக்கள் தேவையான நல்ல இலக்கியங்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு, மற்றவற்றைக் கால வெள்ளத்தில் அழிய விட்டுவிடுகிறார்கள். எனவே காலப் போக்கையும், மக்கள் மன்றத்தின் ஆவலையும் அறிந்து எழுத்தாளர்கள் இலக்கியப் படைப்புகளை உருவாக்க முயலுவார்களேயானால், அதில் அவர்கள் ஓரளவுக்கு வெற்றி பெறக் கூடும். மக்களின் எண்ணத்தையும் வேட்கையையும், காலப் போக்கையும் மதிக்காமல் எழுதப்படும் இலக்கியப் படைப்புகள் நிலை நிற்கவே செய்யா. அப்படிப்பட்ட எழுத்தாளர்கள் வளர முடியாது; வீழவே செய்வார்கள்.

### மக்கள் விருப்பம்

இன்றைய தமிழக மக்கள் தூய—இனிய நல்ல—எழில் மிக்க தமிழ் நடையோடு கூடிய, கருத்தாழம் மிக்க, கவர்ச்சிகரமான இலக்கியங்களையே விருக்புகிறார்கள். இத்தகைய இலக்கியங்களை உருவாக்கித் தரும் பொறுப்பைத் தமிழ் எழுத்தாளர்கள் மேற்கொள்வார்களாக! எல்லா வகையான இலக்கியங்களும் நாட்டிற்குத் தேவை; எனவே எல்லா வகையான எழுத்தாளர்களும் வாழ்வார்களாக! வாழ்க தமிழ் எழுத்தாளர் சங்கம்! வளர்க அதன் முயற்சி! வெல்க அதன் தொண்டு! "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!" என்று முழங்குவோமாக!

—"மன்றம்"

# ஜப்பானியப் பொதுத்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கூடியதால் தோன்றியது என்பதே பொருத்தமானது என்பது புலனாகும். இது போலவே இடதுசாரிக்கட்சிகளும் ஒன்றாயிருந்து பிரிந்து, மீண்டும் ஒன்று கூடி, இன்று சோஷலிஸ்ட கட்சியாக விளங்குகின்றன.

### இடது சாரிகளின் பிளவும் மீட்சியும்

சோஷலிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவிற்குக் காரணமாயிருந்தது அமெரிக்க—ஜப்பானிய சமாதான ஒப்பந்தமும் பாதுகாப்பு ஒப்பந்தமுமாகும். பிரஸ்தாப கட்சியிலுள்ள வலதுசாரி நோக்குடையவர்கள் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்தார்கள். ஆனால் இடதுசாரி நோக்குடையவர்கள், அமெரிக்காவுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளும் பொழுதே, ஜப்பானுடன் போரிட்ட ஏனைய நாடுகளான சோவியத் யூனியனுடனும் செஞ்சீனவுடனும் சேர்ந்தே ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும் என்று வாதிட்டார்கள். அன்று (1951-ல்) பிரிந்தவர்கள் மீண்டும் 1955-ல் ஒன்று சேர்ந்தார்கள். இடதுசாரிகளிடையே ஒற்றுமை மீள்வதற்குப் பெரிதும் தூண்டுகோலாயிருந்த சம்பவங்கள் பல. அவற்றுள், வலதுசாரிகள் மீண்டும்ஒன்றுகூடி லிபரல்—ஜனநாயகக் கட்சியாக உருப்பெற்றது முக்கியமானதொன்றாகும்.

### சோஷலிஸ்ட் கட்சியின் கொள்கை

சோஷலிஸ்ட் கட்சி, எதிர்பார்க்கக் கூடிய வண்ணம், லிபரல்—ஜனநாயகக் கட்சியின் அமெரிக்க சார்புகளை விரும்புவதில்லை. எல்லை வரையறையற்ற காலத்திற்கு ஜப்பானில் அமெரிக்கத் தளங்களை அனுமதிக்கும் ஜப்பானிய—அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தத்தை எதிர்க்கிறது இக் கட்சி. கம்யூனிஸ்ட் நாடுகளுடனும், குறிப்பாக அருகிலிருக்கும் கம்யூனிஸ்ட் மாமலையாகிய செஞ்சீனவுடனும் அதிகரிக்கும் தொடர்புகளை ஜப்பான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறது சோஷலிஸ்ட் கட்சி.

### வளரும் செல்வாக்கு

1947-ல் நடந்த பொதுத் தேர்தல் முடிவில் கூட்டு மந்திரிசபை அமைத்து குறுகிய காலம் பதவியிலிருந்திருக்கும் இக்கட்சியின் செல்வாக்கு இன்று வளர்ந்து கொண்டே போகிறது. சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஐஸனோவர் ஜப்பானுக்குப் போக விருந்த சுற்றுப் பிரயாணத்தை சோஷலிஸ்ட் கட்சி, ஆர்ப்பாட்டங்கள் மூலம் நிறுத்தி வைத்து வெற்றி கண்டிருக்கிறது. (ஜனாதிபதிக்கு ஏற்பட்ட இந்தக் கரிப் பூச்சும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இவர் கட்சி தோல்வியுறக் காரணமாயிருந்தது என்று சில வட்டாரங்களில் கூறப்பட்டிருக்கிறது!) சட்டபூர்வமான பாராளுமன்ற வழிகளில் சோஷலிஸம் நிறுவுவதே சோஷலிஸ்ட் கட்சியின் குறிக்கோள்.

### அரசியற் கொலைகள்

இதன் தலைவர் அஸனுமா சமீபத்தில் ஒரு பகிரங்கக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஓர் இளம் வெறியனால் திடீரெனக் குத்தப்பட்டுக் கொலையுண்டார். ஜப்பானில் அரசியற் கொலைகள் அபூர்வமல்ல. சுமார் 40 வருட காலத்தில் ஐந்து பிரதமர்கள் கொலையுண்டோ குத்தப்பட்டோ இருக்கிறார்கள். ஐஸனோவர் விஜயத்தை யொட்டிய தகராறுக் காலத்தில் பிரதமர் கிஷியும் கத்தியால் குத்தப் பட்டிருக்கிறார் அஸனுமா (Azanuma)வின் கொலைக்குப் பின் எடா (Eda) சோஷலிஸ்ட் கட்சியின் தற்காலிக தலைவராக விளங்குகிறார்.

### ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சி

லிபரல்—ஜனநாயகக் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி ஆகிய இவ்விரு பெரிய கட்சிகளை விட அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்றது ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகும். கட்சி அரசியலையே வளர்க்க விரும்பாத அரசாங்கம் கம்யூனிஸ்ட் கட்சியையா விட்டு வைத்திருக்கும்? கம்யூனிஸ்ட் தலைவர்கள் அனைவரும் [illegible]

(13-ம் பக்கம் பார்க்க)


## தமிழ் G. C. E.

### 101 வினாவிடை

பரீட்சையில் சித்தி தலைவிதியைப் பொறுத்ததல்ல வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில் தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தர வல்லன;

- o தமிழ்ப் பாஷை ரூ 3-00
- o எண் கணிதம் ரூ 3-00
- o குடிஇயல் ரூ 3-00
- o சரித்திரம் ரூ 3-00
- o பூமிசாஸ்திரம் ரூ 3-00
- o சுகாதாரம் ரூ 3-00
- o ஆங்கிலம் ரூ 3-00
- o பயிற்சிச் சிங்களம் ரூ 3-00
- o றோமன் கத்தோலிக்கம் ரூ 3-00
- o இந்து சமயம் ரூ 3-00

## பரீட்சை துணை நூல்கள்

### கடந்த கால வினா விடைகள்

பரீட்சை வினாக்களை அறிந்து விடைகளைப் படிப்பது சிறந்த பாடாயத்தமாகும். மாதிரி வினாவிடைகள் சித்திக்கு வழிகாட்டும்.

- o தமிழ்ப் பாஷை ரூ 3-00
- o எண் கணிதம் ரூ 3-00
- o குடியியல் ரூ 3-00
- o சரித்திரம் ரூ 3-00
- o பூமிசாஸ்திரம் ரூ 3-00
- o சுகாதாரம் ரூ 3-00
- o ஆங்கிலம் ரூ 3-00
- o பயிற்சிச் சிங்களம் ரூ 3-00
- o றோமன் கத்தோலிக்கம் ரூ 3-00
- o இந்து சமயம் ரூ 3-00
- o இஸ்லாம் ரூ 3-00

வி. பி. பி. கிடையாது

தபால் செலவு 35 சதம்

விபரங்கட்கு:

**அற்லஸ் ஹோல்,**
723, மருதானை றோட்,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை பாவித்தவர்கள் என்றுமே மறப்பதில்லை.

அழும் குழந்தை தன் அழுகையை நிறுத்தி அந்த அற்புதப் பொருளின் சுவையில் திளைக்கிறது.

இது ஒரு தனி ரகம் என்று அவனியே பாராட்டுகிறது. ஆமாம் நெஸ்டோ மோல்டுக்குத்தான் இந்தப் பாராட்டு. நெஸ்டோ மோல்ட் ஓர் உன்னத பால் ஆகாரம்.

# பால் உணவின் பெருமை

## சக்தி, சுவை, சிக்கனத்துக்கு சிறப்பு மிக்க நெஸ்டோமால்ட்

### நல்ல உணவு வேண்டும்

எங்களுடைய உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவுகளில் பிரதானமானது பால் ஆகாரம். இதில் பலவிதமான சத்துக்கள் உண்டு என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இன்றைய உலகில் பலர் சக்தி இழந்து காணப்படுவதற்குக் காரணம், அவர்களுடைய உடல் வளர்ச்சிக்கு நல்ல போஷாக்கு உள்ள உணவு இல்லாமையே. இதனால் உடல் நாளுக்கு நாள் மெலிந்தும் சக்தி இழந்தும், விடுகின்றது. தகுந்த முறைப்படி டாக்டரிடம் சிகிச்சை பெற்றாலும் கூட இழந்த சக்தியையும், பலத்தையும் திரும்பப் பெற முடியாது. நல்ல போஷாக்குள்ள உணவு சாப்பிடுவதன் மூலந்தான் இழந்த சக்தியையும், பலத்தையும் திரும்பப் பெற முடியும். டாக்டரிடம் சென்றாலும் அவரும் இதைத்தான் கூறுவார்.

### பால் ரகங்கள்

பால் போஷாக்கு உள்ள உணவுதான். ஆனால் பாலில் பலரகம். உடன் பசுப்பாலைத் தவிரப் புட்டிப் பால்கள், பால் பவுடர்கள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. இவற்றுள் நெஸ்டோ மால்ட் இழந்த சக்தியையும் பலத்தையும் திரும்பப்பெறுதற்கு மிகவும் உகந்தது என்று டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள். இதற்குக் காரணங்கள் பல உள.

### சத்து உள்ளது நெஸ்டோ மோல்ட்

ஆடை நிறைந்த சுத்தமான பசும் பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட ஆகாரமே நெஸ்டோமோல்ட். மோல்ட்டட் பாரிலி மற்றும் தெரிவு செய்யப்பட்ட கோதுமை முதலான சத்தான பொருட்கள் நெஸ்டோ மோல்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. உடல் வளர்ச்சிக்கு அவசியம் தேவையான விட்டமின்களும் மற்றும் இரும்புச் சத்துகளும் கல்சியம், மக்னீசியம், உலோகச் சத்துக்களும் அளவறிந்து அற்புதமாக நெஸ்டோ மோல்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

### சிக்கனமும் சுவையும்

இன்னொரு விஷயம்; நெஸ்டோ மோல்ட் சிக்கனமானது சாதாரண குடும்பத்தவர்களும் வாங்கக் கூடியது. பற்பல அளவுகளில் கிடைக்கிறது. சிறியோர் முதல் பெரியோர் வரை எவரும் பாவிக்கலாம். நோய்க் காலங்களிலும், நோய் குணமாகி உடல் நலம் பெற்று வரும் காலத்திலும் நம்பி நெஸ்டோ மோல்ட்டை அருந்தலாம். நெஸ்டோ மால்ட் சத்தானது மட்டுமல்ல சுவையானதுங் கூட. இதன் சுவை ஒரு தனிரகம்; அலாதி. காற்று போகா வண்ணம் நல்ல கெட்டியான டின்களில் அடைக்கப்பட்டு வரும் நெஸ்டோ மோல்ட்டை இலங்கையில் நெஸில்ஸ் ஸ்தாபனத்தார் விநியோகிக்கிறார்கள்.

சக்திக்கு, சுவைக்கு, சிக்கனத்துக்கு நெஸ்டோ மோல்ட்; இலங்கையில் எல்லோரும் விரும்பிப் பாவிக்கும் பால் உணவு இது.


நான் விரும்புவது

# நெஸ்டோமால்ட்

ஏனெனில்,

அது எனக்கு

எவ்வளவோ

நன்மையளிக்கின்றது....






நெஸ்டோமால்ட்—ஒரு உன்னத பால் ஆகாரம் இது, மால்ட்டட் பாரிலி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற் கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்டஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B², மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஒரு டானிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

குழந்தைகள், வாலிபர், முதியோர் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமால்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானாலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானாலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமால்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமால்ட்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றால், உங்களுக்கு நன்மையானவையாவும் அதில் அடங்கியிருப்பது தான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

தயாரிப்பாளரும் உத்தரவாதமளிப்போரும்

## நெஸில்ஸ்

சாம்பிள் இனும்
நெஸ்டோமால்ட் சாம்பிள் ஒன்றைப் பெறுவதற்கு தபாற் செலவுக்காக 25 சத முத்திரையுடன் உங்கள் பெயரையும் விலாசத்தையும் எமக்கு எழுதி அனுப்புக.

நெஸில்ஸ் புரொடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட், தபாற் பெட்டி 189, கொழும்பு.

## நெஸ்டோமால்ட்

விட்டமின் B, அடங்கியது.


## சுவாமிகளுக்கு பணம் கொடாதீர்

தஞ்சநகரத்து பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலின் பெயரைச் சொல்லி நிதி திரட்ட வரும் எந்தச் சுவாமிக்கும் பணம் கொடுத்து ஏமாறு தீர்கள் என்று மேற்படி கோயில் தர்மகர்த்தா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இந்த வேண்டுகோளுக்கு காரணமாக அமைந்தது 6-11-60 சுதந்திரனில் வெளியிடப்பட்ட ஒரு செய்தியாகும். "தஞ்ச நகரத்துத் தண்ணீர்ப் பஞ்சம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட ஒரு செய்தி நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

கோயிலடியில் மாதவானந்த சுவாமியாரால் தோண்டப்பட்டு வந்த கிணற்றை, அந்தச் சுவாமியார் காலஞ்சென்ற பின்னர், பூர்த்தி செய்த சுவாமி நாராயன குரு இப்போது கோயிலின் பெயரால் பணம் வசூலித்துக் கொண்டு திரிகிறாராம். இப்படி வரும் எந்தச் சுவாமிக்கும் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் என்று கோயில் தர்மகர்த்தா அனைவரையும் வேண்டிக் கொள்கிறார்.

## உயரும் திருமலை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மொத்தத்தில் பல வழிகளிலும் அபிவிருத்தியடைந்து வரும் திருமலை நகராண்மைக் கழகம் விரைவில் மாநகர மன்றமாக (முனிசிபல் சபை) உயர்ச்சி பெறுகிறது. இதை யொட்டி எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆனால் அதே வேளையில் ஒரு குறையையும் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. நல்ல தமிழில் அழகாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் இந்த அறிக்கையுடன் சுதந்திரனுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஏனோ ஆங்கிலத்திலிருந்தது!

—கெ. கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி..

(7ம் பக்கத் தொடர்ச்சி)
சிவில் சேர்விஸ் (Civil Service) பரீட்சைக்குத் தகுந்த வயது உடையவராக இருமுறை தோற்றுவதற்குச் சந்தர்ப்பம் இருந்தது. இந்திய சுதந்திர போராட்டத்தில் தமக்கு இருந்த ஈடுபாடு காரணமாக சிவில் சேர்விஸ் அடிமை உத்தியோகம் என்று கருதி முதல் சந்தர்ப்பத்தைத் தவற விட்டு விட்டார். தாய் தந்தையரும் அவரை வற்புறுத்தவில்லை. பிறகு தந்தையார் நோயாளியாகி விட்டதால் குடும்ப பொருளாதார நிலை கருதி "அடிமை" உத்தியோகத்தையும் ஏற்கத் துணிந்து இரண்டாவது சந்தர்ப்பத்தில் பரீட்சைக்குத் தோற்றியும் சித்தி பெறவில்லை. தமது தோல்வியைத் தம்பியின் வெற்றிக்குப் படியாக்கித் தாம் பரீட்சையில் பெற்ற அநுபவங்கள் தம்பியாருக்குப் பயன்படுமாறு செய்தார் வன்னியசிங்கம். அண்ணன் சொற்படி அயராது உழைத்து முதற் சந்தர்ப்பத்திலேயே சிவில் சேர்விஸ் பரீட்சையிற் சித்தி எய்திய தம்பியார் இந்த இராமருக்கு ஏற்ற பரதராகவே அமைந்தார்.

தங்கையாரது கல்வி தாய் தந்தையர் அளித்த சொற்ப பள்ளிப் படிப்போடு நின்று விடாபடி நூல்கள் சஞ்சிகைகள் வாங்கிக் கொடுத்து அவரது அறிவை வளர்க்க ஆதரவு அளித்தார் வன்னியசிங்கம். தாய் தந்தையர் தமக்கு வகுத்த வீட்டுப் பணியில் ஒரு லட்சியத்தைக் கண்டு மன அமைதி பெற முடியவில்லை சகோதரியர் இருவராலும். எல்லோருக்கும் சாந்திக்கு வழி என்று மகாத்மா காந்தி காட்டிய ராட்டினத்தில் நூல் நூற்றலை லட்சியமாகக் காட்டினார் வன்னியசிங்கம். தங்கையார் மனம் அதைப்பற்றிக் கொண்டு அமைதி பெற்றது; அதையும் பற்ற மாட்டாமல் இலக்கியம் ஒன்றையே மனம் பற்றி நின்ற தமக்கையாருக்காகவும் பெற்றோருடன் நயந்து பேசி, தமக்கையார் சந்தர்ப்பம் வாய்த்த போது ஆசிரியையாகப் பணியாற்றச் சேர்வதற்கு அனுமதி அளிக்கும்படி செய்தார். பிறகும் ஆசிரியை உத்தியோகத்தில் உயர்வு பெற வேண்டிப் பரீட்சைகளுக்குப் படித்த பொழுதெல்லாம் ஊக்கமும் உதவியும் அளித்தார். இவ்வாறு தாயோடு பிள்ளையாய் இருக்கும் போது ஆதரவும் அனுதாபமும் அளித்தவர் கன்னிகாதானம் செய்ததோடு இருவரையும் கை கழுவி விட்டு விடவில்லை. என்றும், வேண்டியபோது வேண்டியாங்கு உதவி செய்து ஆதரித்து வந்தார். வன்னியசிங்கத்தின் ஆதரவில் அவர் பிள்ளைகட்கு உள்ள அத்துணை உரிமை தனக்கும் உண்டென்று தமக்கைகள் கருதும் அளவுக்குத் தம் தந்தையை இழந்த தமக்கை பிள்ளைகளுக்கு அவரிடம் சலுகை இருந்தது. இப்படிச் சகோதரர் மூவரும் தனித்தனி தம்மிடத்திலேயே வன்னியசிங்கத்துக்குத் தனி அன்பு உண்டென்று கருதும்படி அன்பு காட்டிப் பழகினார்.

### தாரகமாகப் பற்றியதன் காரணம்

இன்னுமுள்ள உற்றார் உறவினர் ஒவ்வொருவருக்கும் அவ்வவருக்கு உதவி வேண்டிய காலத்தில் தாம் செய்யும் உதவி சிறிதேயாயினும், சற்பாத்திரத்தில் அளித்த தானம் போலத் தானே பெருகிக் காலகதியில் பெரும்பயன் அளிக்கும் வகையில் அவ்வவருக்கு ஏற்ற உதவியைத் தேர்ந்து செய்தமையால் ஒவ்வொருவரும் தாம் பெற்ற உதவி ஞாலத்தின் மாணப் பெரிது என்றே கருதும்படி இருந்தது. இவ்வாறு பற்பலர்க்கும் பயன் தூக்காது உதவியதால்தான் வன்னியசிங்கத்தை ஊர், அயல், சுற்றம், உற்றார், உறவினர் எல்லாரும் தாரகமாகப் பற்றி நின்றனர்.

நண்பர்கள் தனித்தனி தாம் ஒவ்வொருவரும் என்ன சந்தர்ப்பத்தில் அவரைச் சந்திக்க நேர்ந்தது, அவரது அருங்குணங்களுள் எது அவர்பால் நட்புரிமையில் தம்மை ஈடுபடுத்தியது, நவில்தொறும் நூல் நயம் போல் பழகுந்தோறும் புதிது புதிதாக அவர்பால் தாம் கண்ட உயர் பண்புகள்; செயல் நலன்கள் எவ்வெவை என்பதை யெல்லாம் தத்தம் பேச்சுகளிலும் கட்டுரைகளிலும் விவரித்து வருவதால் அவற்றை இங்கு கூறவேண்டியதில்லை கூறுவது சாத்தியமுமல்ல.

[இத்தொடர் கட்டுரை அடுத்த வாரத்துடன் முற்றுப்பெறும்.]


# ஜப்பானிய பொதுத் தேர்தல்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)
தமது வாழ்நாளைச் செலவளித்தவர்கள். 2-வது உலக யுத்தத்தில் ஜப்பான் தோல்வியடைவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன், சோவியத் ருஷ்யாவும் ஜப்பானுக்கெதிராக யுத்த பிரகடனஞ் செய்தது. அப்பொழுது நேசநாடுகளாயிருந்த அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றிற்கு அளித்த வாக்குறுதியின் பேரிலேயே சோவியத் ருஷ்யா போர் தொடுத்தது. இதன் விளைவாகக் கம்யூனிஸ்ட்டுகளுடன் அமெரிக்கா முண்டிநடந்துகொள்ளச் சூழ்நிலை இடமளிக்கவில்லை. யுத்த முடிவில் அமெரிக்காவின் அனுசரணையுடன்தான் ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சி முதன்முதலாக சட்டபூர்வ அங்கீகாரம் பெற்றிருக்கிறது! 1949-ல் நடந்த பொதுத் தேர்தலில் பிரஸ்தாப கட்சி 35 ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது. ஆனால் இன்று சுமார் 2 கம்யூனிஸ்ட் அங்கத்தவர்களே பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். இருந்தும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டு இவர்களின் பலத்தை நிர்ணயிக்க முடியாது. தொழிலாளர் இயக்கங்களில் பரந்த செல்வாக்குப் பெற்றது கம்யூனிஸ்ட் கட்சி, இக்கட்சியின் தலைவர் நொஸாக்கா (Nozaka) ஆவர்.

ஜப்பானிய சோஷலிஸ்ட் இயக்கத்தில் பிளவுகள் நியதியாகி விட்டன. சுமார் மூன்று மாதங்களுக்கு முன் இக்கட்சியிலிருந்து பிரிந்து சிலர் இன்னுமொரு சோஷலிஸ்ட் கட்சியை ஸ்தாபித்திருக்கிறார்கள். ருஷ்யாவுடனும் செஞ்சீனவுடனும் ஜப்பான் நெருங்கிப் பழக வேண்டுமென்ற கொள்கை எதிர்ப்பின் விளைவே இப்பிளவு. நிஷியோ (Nishio) தலைமையில் தோன்றிய இக்கட்சி, வலதுசாரி லிபரல்—ஜனநாயகக் கட்சியின் கொள்கைச் சார்புடையது.

ஜப்பானிய தேர்தல் முடிவுகளில் அமெரிக்காவிற்கும் ருஷ்யாவிற்கும் பெரிதும் கரிசனையுண்டு. எனவே இவ்விஷயத்தில் உலக மக்களை வரும் கரிசனை கொண்டிருக்க வேண்டியவர்களே!


வெற்றிகரமான 4-வது வாரம்!




கெபிட்டி ★ இம்பீரியல்
(கொட்டாஞ்சேனை) (மட்டக்களப்பு)

மயிர் கூச்செடுக்கச் செய்யும் திடுக்கிடும் சம்பவங்களையும், வீராவேசமான வாள் சண்டைகளையும், இனிய பாடல்களையும், கவர்ச்சிமிகு நடனங்களையும் சதாவும் அளிக்கும் ஜுபிடர் பிக்சர்ஸாரின் மகத்தான சித்திரம்.

ஜெமினி கணேசன்—சரோஜாதேவி—எம். என் ராஜம்—எம். என். நம்பியார்—டி. கே. பகவதி தங்கவேலு—நாகேந்திரராவ் முதலியோர் நடித்த

எல்லோரும் இந்நாட்டு மன்னர்

தொடர்ந்து வெற்றிகரமான 6-வது வாரம்!
செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) | சிவாஜி கணேசன்—சௌகார் ஜானகி—கண்ணாம்பா நடித்த
படிக்காத மேதை






குதூகலமான 4—வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்)
ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)
லிபேர்ட்டி (பதுளை)

ஒரு ஏழை உழவனின் வாழ்க்கையில் நிகழும் இன்ப துன்பங்களை எடுத்துக் காட்டும் இலட்சிய திரை விருந்து!

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாங்கான பைந் தமிழ்த் திரைக் காவியம். உள்ளத்தை உருக்கும் கதை.

ஒவ்வொருவரும் பார்த்து மகிழவேண்டிய திரைக் களஞ்சியம்.

ஜெமினி கணேஷன், பத்மினி, ராகினி, பாலையா, சந்திரபாபு, எஸ். வி. சுப்பையா டி. பால்சுப்பிரமணியம், சுகுமாரி, அங்கமுத்து முதலியோர் நடித்த

பொன்னு விளையும் பூமி

திரைக் கதை—வசனம்! இராம அரங்கண்ணல்
சங்கீதம்! கே. எச். ரெட்டி
பின்னணி பாடியவர்கள்!
சிதம்பரம் ஜெயராமன் — டி. எம். சௌந்திரராஜன் சீர்காழி கோவிந்தராஜன் — சுசிலா — ஜிக்கி ஜமுனாராணி — ஜானகி.


# கொம்யுனிஸ்டு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### கந்தையா தயாரித்த கடிதம்

"தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் திருமலையில் ஸ்தாபிக்கவிருப்பதையும் அதைத் தமிழ் பேசும் பிரதிநிதிகள் ஆதரிப்பதையும் பிரதமருக்கு அறிவித்து அரசாங்கத்தின் ஆதரவைக் கோருவதாக அமைந்தது திரு. கந்தையா எழுதிய அக்கடிதம். அது வருமாறு:—

"We the undersigned Members of Parliament have great pleasure in informing you that we are in support of the demands of the Tamil-speaking peoples for a full-fledged University at Trincomalee, which will eventually teach in the Tamil medium and request you to be so good as to make the necessary provision for the establishment of the said University."

# 'பலிக' இழந்த

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
நோக்குக் கூட்டுறவு இயக்கம் அனைத்தையுமே பற்றி ஒரு விசாரணை நடத்தப்பட வேண்டும். ஊழல்கள் நிறுத்திவைக்கப்பட, ஏற்ற பரிகாரங்கள் கையாளப்பட வேண்டும்.

ஃ

டாக்டர் விக்கிரமசிங்கா: காவிப் பிரதிநிதி (தஹநாயகா) பேசியதைக் கேட்டுக் கொண்டபடியே இவர் அமைச்சராகவும் பிரதமராகவும் நடந்து கொண்ட முறையைக் கவனிக்கும் பொழுது இந்த ஒன்றை நான் கூறுதிருக்க முடியவில்லை. அதாவது, தவறான புத்திமதியினால், ஒரு நல்ல இலட்சியமே பாழாகலாம்!

தஹநாயகா: நல்ல நோயாளி ஒருவனும் திறமையற்ற ஒரு வைத்தியனால் கொலை செய்யப் படலாமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலக சுவாத்தியங்கள் (3)

அடுத்து மூன்ருவதாக நாம் வெப்ப வலையப் பாலை நிலங்களை ஆராய்வோம். இப்பாலைவனம், புல் வெளிகளுக்கு (சவானுஸ்) துருவப் பக்கமாகப் படிப்படியாக பாலைவனங்களாக மாறுகின்றன. இப்பாலைவனங்களை தடற்காற்றுப் பாலைவனம் என்றும் கூறலாம்.

வெப்ப வலைய அல்லது தடற்காற்றுப் பாலைவனச் சுவாத்தியம் மிகச் சொற்ப மழையைப் பெறும். அநேகமாக ஒரு பருவத்திலும் மழை பெய்வதில்லை. இது கண்டங்களின் மேற்குப் பக்கங்களில் தான் காணப்படுகின்றன. ஏனெனில் கிழக்குப் பக்கங்களில் வீசுங் காற்று கடலிலிருந்து வீசுவதாகையால் நீர்ச்செறிவுடையதாய் இருக்கின்றது. வானம் தெளிவாயிருப்பதால் பகலில் வெப்ப நிலை மிக உயர்ந்து, இரவானதும் விரைவாக இறங்கி விடுகின்றது. எனவே, தினசரி வெப்ப வியாப்தி மிக அதிகமாகும். சகாராவும், பெரு, வடசில்லி, இவற்றின் கரைப் பகுதிகளும் இதற்கு உதாரணங்கள்.

| | தை. | மாசி. | பங் | சித். | வை. | ஆனி. | ஆடி. | ஆவ. | புரட். | ஐப். | கார். | மார். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தா பாலைவனம்! | பாகை 57 | பாகை 62 | பாகை 74 | பாகை 85 | பாகை 94 | பாகை 98 | பாகை 92 | பாகை 95 | பாகை 89 | பாகை 80 | பாகை 78 | பாகை 70 |

உஷ்ணம்: வெப்ப வலையப் பாலைவனங்கள் மிகவும் உஷ்ணம் உடையனவாய் இருக்கின்றன. சராசரி அளவ 80 பாகை கூட உண்டு. ஜூலை மாதத்தில் நிரட்சரேகைக்கு வடக்கேயுள்ள பாலைவனங்களில் 90 பாகை வரையும் டிசம்பர் மாதத்தில் 80 பாகையுங் காணலாம். இந்த உஷ்ணம் காலத்துக்குக் காலம் அதிக வித்தியாசத்தைக் காட்டாது. ஆனல் இராப் பகலுக்கு இடையே 14பாகை, 15பாகை வரை வித்தியாசம் உண்டு.

மழை: மழையில்லாத காரணத்தினுலேயே இச் சுவாத்தியத்துக்கு பாலைவனம் என்று பெயர் வந்தது. ஒரு வருடத்துக்கு 10 அங்குலத்திற்குக் குறைய மழை பெய்கின்றது. சவானுப் புல்வெளிகளை அண்டியிருக்கும் பாலைவனங்களில் சற்றுக் கூடுதலாக இருக்கும் மழை துருவப் பக்கம் செல்லும்பொழுது படிப்படியாக குறைந்து கொண்டே போகின்றது. இப் பிரதேசங்கள் வடகீழ் தடற்காற்று வீசும் பக்கத்திலே இருந்தும் மழை பெய்யாத காரணம் கண்டங்களின் மேற்குப் பக்கத்திலே இருப்பதனுலாகும்.

| | தை. | மாசி. | பங். | சித். | வை. | ஆனி. | ஆடி. | ஆவ. | புரட். | ஐப். | கார். | மார். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கய்ரோ: | அங். .3 | அங். .2 | அங். .2 | அங். .2 | அங். 0 | அங். 0 | அங். 0 | அங். 0 | அங். 0 | அங். .1 | அங். .1 | அங். .2 |

இந்த எண்களை ஆராய்ந்து பார்த்தால் இத்தகைய சுவாத்தியத்தில் எவ்வளவு மழை பெய்கின்றது என்பது தெளிவாகின்றது.

தாவரங்கள்: பாலைவனம் என்ருல் தாவரம் அங்கு சிறிதளவுகூட கிடையாதென்று கருதுதல் தவருகும். பாலைவனத்தின் நடுப் பகுதிகளில் தாவரம் இல்லாதிருப்பது இயல்பு—இதன் எல்லைப் பிரதேசங்களில் இடையிடையே உறுதியான புல் அல்லது திடமான செடிகளுள்ள சிறு நிலப் பகுதிகளைக் காணலாம். இச் செடிகள் மழையில்லாத காலத்திலும் நிலைக்க வல்ல தன்மை உடையன. இவற்றுட் சில மிக நீண்ட வேர்கள் உடையன. மிக ஆழத்திலுள்ள நீரைத் தேடிக் கொள்ள, அந் நீண்ட வேர்கள் உதவுகின்றன. கள்ளி (Cactus) போன்ற வேறு சில செடிகள் தசைப் பிடிப்புள்ள தண்டுகளை அல்லது இலைகளையுடையன.

அவற்றுள் அச்செடிகள் நீரைச் சேமித்து வைத்துக் கொள்ளும். அத் தாவரங்களின் வெளிப்புறம் சேமித்த நீர் வெளியேருதபடி மெல்லிய அரக்குப் பட்டையால் மூடப்பட்டிருக்கும். இக் காரணம் பற்றியும், மிருகங்கள் மேயாமல் இருக்கும் பொருட்டும் இலைகளுக்குப் பதில் அத் தாவரங்களில் செதிள்களும் முட்களும் நிரம்ப இருக்கும். வேறு சில செடிகள் நிலத்திற்குள் கிழங்குகளாகவோ, சில சமயம் வருடக் கணக்காக மழையை நோக்கி ஒய்ந்து கிடக்கும். எப்பொழுதாவது மழை பெய்தால் ஒய்வு கலைந்து வளரும். ஏதாவது ஊற்றிலிருந்தோ அல்லது எங்கேயோ தொலைவில் பனி

“சிறுமலர்”

யால் மூடப்பட்ட அல்லது மழையைப் பெறும் மலையிலிருந்து வரும் ஆற்றிலிருந்தோ பாலைவனங்களிற் சில இடங்களுக்கு நீர் கிடைக்கும். அங்ஙனம் நீர் பெறும் இடங்களுக்கு “பாலை இடைச்சோலை” அல்லது “பாலைவனப் பசும்புற்றரை” (Oasis) என்று பெயர்.

இத்தகைய இடைச்சோலைகள் சில ஒரே ஒரு ஊற்ருல் பசுமை பெறும். சிறிய அளவினதாய் இருக்கும். சில சமயங்களில் 30 மைல் வரை அகன்று பல கிராமங்களைக் கொண்டதாக இருக்கும். பேரீச்சுதான் இங்கு முக்கியமான மரம். அதன் அடியில் நிறைய நீர் இருந்தால் அது பூத்துக் காய்க்கும். பேரீச்சின் பழம் முற்றிப் பழுப்பதற்கு மிக உயர்ந்த கோடை வெப்பம் அவசியம். அதன் நிழலில் நெல், தினைபோன்ற தானியங்களும், பலவகை வெப்ப வலையப் பழச்செடிகளும் உண்டு பண்ணலாம்.

பாலைவனத்தின் முக்கிய பிராணி ஒட்டகம். அது மிகப் பாரமான பொருள்களைச் சுமக்கும். ஒரு நாளைக்கு சுமார் 30 மைல் நடக்கும். தண்ணீரைத் தேடாமல் நீண்ட நேரம் கழிக்க வல்லது. அதற்கு மணலில் புதையாத பரந்த குழம்புகள் உண்டு.

பாலைவன எல்லைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் தங்களுடைய ஆடு, மாடு, ஒட்டகம், குதிரை முதலிய மிருகங்களைச் சாய்த்துக் கொண்டு, புதிய புதிய புற்றரைகளைத் தேடிச் செல்வர். இப்படி இடம் இடமாகச் செல்லும் இடையர்களை நாடோடிகள் என்பர்.

பாலைவனப் பசும் புற்றரைகளில் தான் மனிதர் நிலையாக வாழ முடியும்; அங்கு மந்தைவளர்ப்பதுடன் கமத்தொழிலும் செய்யலாம். கால்வாய்கள் அமைத்து நீர் பாய்ச்சல் வசதிகளை ஏற்படுத்தினுல் இவ்விடங்களில் பயிர் செய்யலாம். எகிப் [illegible] லும் இப்பொழுது கால்வாய்கள் உதவியினுல் பருத்தி, நெல், கோதுமை முதலியன பயிரிடப்பட்டிருக்கின்றன. சுரங்கப் பொருள் கிடைக்கும் இடங்களில் பக்கள் பாலைவனம் ஆயினும் குடியேறி இருக்கின்றனர். மேற்கு அவுஸ்திரேலியாப் பாலைவனத்தில் சிற் சில இடங்களில் தங்கம் உண்டு.

கால்கூலி, கூல்காடி முதலிய இடங்களில் அநேக மனிதர்கள் தங்கம் வெட்டுகின்றனர். வேறு சில பாலைவனங்களில் பல காலம் மழைபெய்யாமையால் மண்ணில் உள்ள உப்புகள் எல்லாம் சேர்ந்து பூமிக்குக் கீழ் படையாகத் தங்கும். இத்தகைய இடங்களிலும் சுரங்க வேலை ஏற்படும். வடசிலி இதற்கு உதாரணம். கலஹாரி பாலைவனத்தின் வடகீழ் பாகங்களில் செம்பு எடுக்கப்படுகின்றது. இவ்வாருகப் பாலைவனங்கள் சிறிதளவாயினும் மனிதர்களுக்குப் பயனளித்து வருகின்றன.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை “வளர்மதி”யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து “வளர்மதி” C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 7

பெயர் ..........................................

பாடசாலை ..........................................

விலாசம் ..........................................

..........................................

.............................. ..............................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## வளர்மதி புதிய மருமக்கள்

3222 செல்வி சி. பத்மாவதி, ஊரெழு மேற்கு.
3223 அ. வ. அ. ஹலீம், காலி
3224 ந. ஸ்ரீ காந்தா, காரைநகர்.
3225 மா. செல்வராணி, சித்தங்கேணி.
3226 எஸ். கணேஷன், உடுப்பிட்டி.
3227 செல்வி கலாவதி, சொக்கலிங்கம்.
3228 செல்வி. பொ. மகேஸ்வரி பலாங்கொடை.
3229 தி. மதுரம், தம்மனை, அளவெட்டி.
3230 இ. ஸ்ரீதரசர்மா, மட்டக்களப்பு.

## உயிர்களின் தோற்றம்

புவி, பரிதியிலிருந்து உண்டாகியதென்பது விஞ்ஞான உண்மை. அதன் மேற்குப்பகுதி ஆறிக் குளிர்ந்தபிறகு உள்ளிருந்து வெளிக் கக்கிய நெருப்புக் குழம்புகள் நாளடைவில் இறுகி மலைகளாகின. வெப்பத்தால் புவி வெயர்த்து நீர் செறிந்து பள்ளங்களெல்லாம் கடல்களாயின.

மழை பெய்தது. நதிகள் ஓடின. காற்று வீசியது மலைகளிலிருந்து கற்கள் உண்டாகி நதிகளால் அடைக்கப்பட்டு மணல்களாகின. நிலம் குளிர்ந்தது. நிலத்திலும் நீரிலும் பல உயிருள்ள பாசி போன்றவை உண்டாக்கிப் பல்கிப் படர்ந்து பெருத்துத் தாவரங்களாகின.

ஒருவித உயிர்கள் பறவைகளாய்—விலங்குகளாய்—ஊர்வனவாய் — நீர்வாழ்வனவாய்ப் பரிணமித்தன. அதாவது மீனினங்களிலிருந்து இயற்கை மாற்றத்தால்—இடத்தின் தன்மையால்—காலப் போக்கால் தவளையினம் உண்டாகி அதிலிருந்து தேவாங்கினம்வந்து ஒரு பகுதி பாம்பு—உடும்பு—பல்லி—ஓணன் அரணை போன்றவையாய் மாற; மறுபகுதி வாற்குரங்கு இனமாகி நாளடைவில் வாலில்லாக் குரங்காகிப் பின்னர் பல மாற்றங்களெய்தி இறுதியில் மனிதர்களாகியிருக்கின்றது. இதையே பரிணும வளர்ச்சியென்பர்.

## ஓடாத உயிர்!

அந்தகாரம் சூழ்ந்த நேரம். ஊரே உறங்குகிறது. ஆனல்.........ஆந்தை அலறுகிறது, நரி ஊளையிடுகிறது, பூச்சிகள் கத்துகின்றன, வௌவால்கள் 'விர்'ரென விரைகின்றன, இடையிடையே நாய்களின் குரைப்பு. அந்த அகால வேளையிலும் ஒரு கரிய உருவம் பதுங்கிப் பதுங்கிச் செல்கிறது. ஆமாம்! கொள்ளைக்காரன் தான். ஏன்? அவனுக்கும் “வயிறு” என்று ஒன்று இருப்பதனுல்......!

அது ஒரு வெட்ட வெளி. அகோரமான வெயில். அந் நேரத்திலும் உடல் ஒட்டி உலர்ந்து ஒருபிச்சைக்காரன் வயலூரை நோக்கி நடந்துக் கொண்டிருக்கிருன் தள்ளாடியபடி. ஏன்? எண்சாண் வயிற்றிற்காக.

அடுத்த கிராமம் செழிப்புடனிருக்கின்றது. வயல்களுக்குக் குளங்களிலிருந்து நீர் பாய்ச்சப்படுகிறது. இருவர் ஒரு வயலை உழுது கொண்டிருக்கின்ருர்கள். அவர்களுடம்பெல்லாம் வியர்த்துக்கொட்டி கறுமை படர்ந்திருக்கிறது. வயிறு இருக்குமிடத்தில் ஒரு 'குழி' தான் தென்படுகிறது. இரத்தத்தை வியர்வையாக்கும் அந்தப்பாடும் ஒரு பிடி சாதத்திற்காகத்தான்.

பட்டினத்திலுள்ள ஒரு தெருவழியே ஒரு சிறுவன் நடந்துக்கொண்டிருக்கின்ருன். அவனருகில் ஒரு சிறுமி நிற்கின்ருள். சகோதரி போலும். அவ்வேளை எதிர் வீட்டிலிருந்து எச்சிலிலை ஒன்று விழுகிறது. முகம் மலர அதை நோக்கி ஓடுகின்ருன். ஆனல்!......அதற்குள் அதை ஒரு நாய் எடுத்துக் கொண்டோடுகிறது. ஐயோ! பரிதாபம். அதைத் துரத்திப் பிடிக்கவும் சக்தியற்று நிற்கின்ருர்கள் பரிதாபத்துக்குரியவர்கள்.

விந்தை மிகுந்த இவ்வுலகினிலே தினமும் இப்படியான கணக்கற்ற கோரக் காட்சிகள் காணக்கிடக்கின்றன எல்லாம் “வாழவேண்டும்” என்பதற்காக! சோறு கேட்க வயிறு என்ரென்று இருப்பதனல்!! நீதியற்ற உலகு! நேர்மையற்ற வாழ்க்கை!! கண்ணியம் பேசும் உலகு! அங்கே கண்ணற்றவர் வாழ்க்கை!! உளுத்து உருக்குலைந்த உலகு! அங்கே உன்னை ஒரு பிடி சோற்றிற்கு நாயினும் கீழானவாழ்க்கை!! ஐயகோ! இதை யெல்லாம் பொறுத்துக்கொண்டு உடலில் உயிர் எப்படி இருக்கின்றதோ? இவ்வுடலில் ஒன்பது துவாரங்களிருக்கின்றனவே. அவற்றின் ஒன்றின் வழியாக அது ஓடமுடியாதா? இவற்றைச் சகித்துக் கொண்டு உயிர்ஓடாமலிருப்பது ஆச்சரியந்தான். இப்படி எண்ணித்தான் சிவப்பிரகாச சுவாமிகளும் பாடினுர் போலும்.

“வருந்தும் உயிர் ஒன்பான்
வாயில் உடம்பில்
பொருந்துதல் தானே
புதுமை—திருந்திழாய்
சிதநீர் பொள்ளல் சிறு
குடத்து நில்லாது
விதலோ? நிற்றல் வியப்பு”

—மூ. க. ராஜா
மத்துகாமம்.

வாலில்லாத கொரில்லா—சிம்பன்சி போன்ற குரங்கினங்களின் மூதாதையர்களும், ஆதி மனிதரின் மூதாதையர்களும் ஒரே இனம் என்பது டார்வினுடைய கொள்கை. இது இன்னும் முழு உண்மையாகவில்லை. ஆனல் முழுவதும் பொய்யுமல்ல. காலம் போகப்போக யாவும் தெளிவாகும்.

—சோ. இராஜேந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## வற்றுப்பளை றே. க. பா. மாணவர் மன்றம்

வற்றுப்பளை றே. க. பாடசாலை மாணவர் மன்றத்தின் விசேஷ கூட்டமொன்று கடந்த 17-10-60ல் மன்றத் தலைவர் செல்வன் சி. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில் வட இலங்கை ஆசிரிய சங்கத்தால் நடாத்தப்பட்ட மாணவர் பேச்சுப் போட்டியில் மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற செல்வன ம. முத்து இம்மானுவேல், பேச்சுப் போட்டியில பாலர் பிரிவின் மூன்றும் பரிசைப் பெற்ற செல்வன் க. பூபாலசிங்கம், இலங்கை அரசினர் கலாச்சார அலுவற் பகுதியால் சிறீலங்கா இலக்கிய தினத்தையொட்டி நடைபெற்ற வியாசப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் முதல் இடம்பெற்ற செல்வன் மு. குகதாசன், கனிஷ்ட பிரிவில் முதல் இடம் பெற்ற செல்வன் வே. இரத்தினராசன் ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

## இளைஞர் மன்றம்

குருக்கள்மடம் இளைஞர் மன்றப் பொதுக் கூட்டம் கடந்த 24-9-60-ல் சங்க மண்டபத்தில் திரு. பெ. சத்தியலிங்கத்தின் தலைமையின் கீழ் கூடியது. அவ்வமயம் சங்கம் முதலில் ஒரு பொதுவான வாசிகசாலையை உடனடியாக திறக்க வேண்டுமெனவும், அவ்வாசிகசாலைக்கு "குருநாதர் வாசிகசாலை" என பெயரிட வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## முத்தமிழ் மாணவர் மன்றம்

முத்தமிழ் மாணவர் மன்ற செயற்குழுக் கூட்டம் அணிமையல கொழும்பு நகரவைக் கட்டிட இல்லத்தில் தலைவர் திரு. பொன்னக்கோன் தலைமையிக் கூடியது. ஆரம்பத்தில் காந்திஜியின் நினைவிற்காக ஒரு நிமிடம் மௌனம் அனுட்டிக்கப் பட்டது.

செயற் குழுவில் முக்கியமாக பொருளாதாரம், 'புலித்தேவன்' நாடகம் அரங்கேற்றல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. நாடகத்தை பொங்கல் தினத்தன்று அரங்கேற்றுவதென்று தீர்மானிக்கப்பட்டது. அடுத்ததாக இளங்கோவுக்கு விழா எடுப்பது பற்றியும் ஆராயப்பட்டு அதற்கான உதவிகளை தமிழகத்தில் இருந்து பெற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## காமாட்சியம்மாள் சன சமூக நிலையம்

நீர்வேலி காமாட்சி அம்பாள் சன சமூக நிலையத்தின் சார்பாக தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் காந்தி, பாரதி இல்லங்களுக்கிடையில் போட்டி பலமாக இருந்தன. 83 புள்ளிகளைப் பெற்ற காந்தி இல்லம் சம்பியன் இடத்தைப் பெற்றது. பாரதி இல்லம் 63 புள்ளிகளைப் பெற்றது.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு நிலையத்தின் காரியதரிசி திரு க. பத்மநாதனால் பரிசில்கள் வழங்கப் பெற்றது.

## கொக்குவில் பகுத்தறிவு இயக்கக் கிளை

அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்க கொக்குவில் கிளையின் செயற்குழு கூட்டம் கொக்குவில் சன சமூக படிப்பகத்தில் கடந்த 9-10-60-ல் செல்வன் ச. யோகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

செல்வன் திரு. பொ. தருமராசா "திண்டாதே" என்ற தலைப்பில் பேசினார். செல்வன் சி. யோகேந்திரராசன் பேசிய பின்னர் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

## பத்தமேனி மாணவர் தேர்ச்சிக் கழகம்

பத்தமேனி மாணவர் தேர்ச்சிக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 28—10—60-ல் சன சமூக நிலைய மண்டபத்தில் திரு. ப ந தம்பிநாதன் தலைமையில் நடைபெற்றது. புது வருட உத்தியோகத்தர்களாக கீழ்க்கண்டோர் தெர்வு செய்யப்பட்டனர்:—

போஷகர்: வே. நவரத்தினம், தலைவர்: ப. ந. தம்பிநாதன். உப-தலைவர்: இ. நவரத்தினம், காரியதரிசி: இ. ஏகாம்பரம், தனாதிகாரி: த. நடேந்திரன், விளையாட்டுப் பொறுப்பாளர்: சி. கணபதிப்பிள்ளை.

# அரணை காலால்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

### காணுக்கடி

காணுக்கடி என்று ஒரு பூச்சியில்லை. காணுபல் சிலந்தி, எலி, தேள், முதலியன கடிக்கும். அதைத்தான் காணுக்கடி யெனலாம். காணுயல் கடிப்பதால் காணுக்கடி எனச் சொல்லுவார். இவைகள் கடித்த இடத்தில் புண் உண்டாகும். இதற்குத்தக்க விஷச் சிகிச்சையில் சுகமடையலாம்.

### பூரான்கள்

இவற்றிலும் இனமுண்டு. சிறு பூரான் பெரும் பூரான் (திருநீலகண்டன்) இவைகளாலே தாக்கப்பட்ட இடத்தில் (கடுக்கி) வலியுண்டாகும். வலி தாங்க முடியாததாக இருக்கும். திருநீலகண்டன் கடிப்பதால் சிலருக்குக் கடித்த நேரம் தொடங்கி மறுநாள் கடித்த நேரம் வரையும் தாங்க முடியாத வலியுண்டாகும். இந்த வலியை உடனே நிறுத்தவும். விஷவைத்தியத்தில மூலிகள் உண்டு.

### வெள்ளைப் பூரான்

இது தற்பொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகமாகக் காணப்படுகின்றது. இந்தியாவில் அதிகம் உண்டு. இது உருவத்தில் சிறியது; 8 அங்குல நீளமுள்ளது. சிறு பூரானின் தோற்றமானதாக இருக்கும். ஆனல் வெள்ளை நிறமானதாக இருக்கும். இது கடித்தால் வலி தாங்கமுடியாது. உஷ்ணப் பிரதேசங்களிலுள்ள வெள்ளைப் பூரான் தீண்டினல் மரணமும் ஏற்படக் கூடும். அவ்வளவு கொடிய விஷமுடையது. ஆனல் இதன் வலியைத் தாங்கமுடியாது; தாக்கப்பட்டவர்கள் படும் துன்பத்தைக் கண்ணுல் பார்க்க முடியாது. இதற்கும் உடனே சிகிச்சை செய்ய வேண்டும்.

### தேள்கள்

இவற்றில் 4 வகையுண்டு. (1) மட்டைத்தேள் (2) சிறுதேள் (3) கருநீலத்தேள் (4) வெள்ளைத்தேள். இவற்றில் மட்டைத்தேள் உருவத்தில் பெரியது. இதைக்கண்டு வாய்க்காலி எனவும் அழைப்பார்கள். தேள்கள் இரண்டு கால்களாலும் கௌவிக் கொண்டு வால் போன்ற கொடுக்கினல் தாக்கும். கொடுக்கிலேதான் விஷம் உண்டு. இது தாக்கினலும் கடுப்பு, எரிவு, வலி உண்டாகும். தாக்கப்பட்டு 15 நிமிஷத்துக்குள் (கமக்கட்டு) கையிடுக்கு அல்லது தொடையிடுக்குள் "நெறி" உண்டாகும். ஆனல் சிவமோசம் செய்யக் கூடியதல்ல. வழுதலைக் கத்தரிக்கையைச் சுட்டு இளம் சூட்டுடன் கடிவாயில் வைத்துக் கட்டினல் வீக்கம், விறைப்பு, வலி முதலியன குணப்படும்.

### அரணை

இது வீடுகளில் அதிகமாகக் காணப்படும். குப்பை, செடிகள் முதலியவற்றுள் வசிக்கும். இது கொடிய விஷமுடையது. "அரணை கடித்தால்மரணம், அட்டை கடித்தால் குட்டை" என்பது பழமொழி. ஆனல் அதன் விஷத்தையும் தக்க மருந்துகளால் குணப்படுத்தலாம். அரணை விரைவில் கடியாது. அது கடிக்க வரும்பொழுது காலால் சுரண்டி விட்டு நாவால் நக்கும். இது தான் அரணை கடிக்கும் விதமாகும். அரணை கடித்தவுடன் வாயால் நுரை தள்ளும், மயக்கம், தேக நடுக்கம் முதலிய குணங்கள் காணப்படும். உடனே வைத்தியனை நாடவேண்டும்.

### ஓணன்

இதுவும் அரணையினத்தைச் சேர்ந்தது. ஆனல் உருவத்தில் பல மாறுதல்களுண்டு. சீவிக்கும் இடத்துக்கு ஏற்ப நிறத்திலும் வித்தியாசம் உண்டு. தனது முதுகிலுள்ள தடிப்பான பாகத்தால் பகைவரை எதிர்க்கும்.

—(தொடரும்)

# அவள் ஒரு பெண்!

(10ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு விட்டு வரலாம் என்று நினைக்கிறேன்."

"அதற்கு?"

"இல்லை. இது முறையாக இருக்குமா என்று கேட்க வந்தேன்." என்றார் கனகலிங்கம்.

'அப்படியே செய்யுங்கள். அவர்கள் என்ன பிறத்தியாரா? சொந்த மாமனும் மாமியும் தானே" என்றேன். அவர் போய் விட்டார்.

தேவகிக்குக் கல்யாணமாம். ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் அவள் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியவள் தானே! ஆனல் என்னல் அதைச் சகிக்க முடியவில்லை. சகிக்காமலும் இருக்க முடியவில்லை............

என்னோடு நிழல் போலத் தொடர்ந்து எனது ஒவ்வொரு காரியத்தையும் அவதானித்துக்கொண்டு எனக்குள் ஒளிந்து கொண்டிருந்த உள் மனிதன் வெளியே வந்தான்.

"நீயேன் வேதனைப்படுகிறுய்?" என்று அந்த உள் மனிதன் என்னைப் பார்த்துக் கேட்டான்.

"தேவகிக்குக் கல்யாணமாம். அவள் கொழும்புக்குப் போகிறுளாம்"

"நீ அவளைக் காதலித்தாயா? கல்யாணம் செய்து கொள்ள இருந்தாயா?"

"இல்லை"

"அப்படியென்றுல் அன்று அவளுடைய கையைப் பிடித்து ஏன் அப்படி நடந்து கொண்டாய்?"

"அது மனித சுபாவம். இயற்கையின் தூண்டுதல். உள்ளத்தின் பலவீனம்; அடிமனத்தின் சலனம்."

"உனது இந்தக் காரணங்களைக் கூறிக்கொண்டே ஒவ்வொருவரும் தப்பிதமான வழிகளில் நடக்கலாம் என்கிறுயா?"

"கூடாது. இப்படியான சந்தர்ப்பங்களில மனிதன் தவறுன பாதையில் போனல் அவனைத் தடுத்து நிறுத்தத்தான் பண்பாட்டைப் பேணுகிறுர்கள். பகுத்தறிவை வளர்க்கிறுர்கள். மனச்சாட்சியைக் கட்டியழுகிறுர்கள்" என்றேன். உள்மனிதன் சிரித்தான். மறைந்து விட்டான்.

"நான் புறப்படப் போகிறேன். பேச வேண்டியவற்றை யெல்லாம் பேசி முடியுங்கள்" என்ற தோரணையில் ரயில் கூவியது. கடந்த அரைமணி நேரமாக மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தடுமாறித் திரிந்த நான் தைரியத்தோடு நிமிர்ந்து அவளைப் பார்த்தேன்.

அவளும் பார்த்தாள். அவளுடைய கண்களில் நீர் ததும்பி வெதும்பிக்கொண்டிருந்தது!

"போகிறுயா? என்னை விட்டு விட்டுப் போகிறுயா? கொழும்புக்கு என்னை விட்டு விட்டுப் போகிறுயா? கல்யாணம் செய்துகொள்ளக் கொழும்புக்கு என்னை விட்டு விட்டுப் போகிறுயா?" என்று கேட்பது போல இருந்தது எனது பார்வை.

"அனுப்பிவிடப் போகிறீர்களா? என்னை அனுப்பிவிடப் போகிறீர்களா? போய் வாம்மா கொழும்புக்கு என்று என்னை அனுப்பிவிடப் போகிறீர்களா?" என்றுகேட்பது போல இருந்தது அவளுடைய பார்வை.

ரயில் நகர்ந்தது. அவள் ஒரு வார்த்தைதானும் பேசவில்லை, நானும் பேசவில்லை.

அவள் கையை அசைத்தாள்; நான் கையை அசைத்தேன். தேவகி! —

போகிறுயா? போ!

நான் மரமாக பிளாட்பாரத்தில் நின்றேன். அந்த உள்மனிதன் மீண்டும் என் முன்னே தோன்றி குறுக்கு விசாரணையை ஆரம்பித்தான். யார் யார் எங்கு போய் எங்கு வந்தாலும் இந்தப் புதிய மனிதனிடம் கணக்குச் சொல்லித்தானுக வேண்டுமோ! அவன் ஆரம்பித்தான்—

"தேவகி உன்னைக் காதலித்தாளா?"

"தெரியாது"

"அவள் உன்னைக் கல்யாணம் செய்ய எண்ணி இருந்தாளா?"

"தெரியாது"

"அன்று அவள் உன் கண்களைப் பொத்தி ஏன் வம்பு செய்தாள்?"

"தெரியாது"

"போகும்பொழுது அவள் ஏன் கண் கலங்கினுள்?

"தெரியாது"

"அவளைப்பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாமல் இருக்கிறதே, ஏன்?"

"அவள் ஒரு பெண்! பெண்களின் மனத்தைப் படிக்க யாரால் முடிந்தது?

அவன் ஒளிந்து கொண்டான். எனது மனம் சலனமற்று அமைதியுற்று நிறைவு பெற்று வருவது போலத் தெரிந்தது. நான் இன்றைய இரவு ரயிலில் வீட்டுக்குப் போகிறேன். [illegible] பார்க்க வேண்டும்!

சுதந்திரன்
இல்லையேல்
சுபீட்சமில்லை

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, கிரங்கு, பற்றுகள், சொறி, தேமல் நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

**பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.**

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

**பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.**

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி முரசு கொட்டும் 2-வது மாதம்!

## கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா

[கொழும்பு] [வெள்ளவத்தை] [யாழ்ப்பாணம்] [அப்பாரை]

மற்றும் 11 திரைகளில்

தென்னு தமிழை அள்ளி வீசும் திரை வானிலே தீரமும், வீரமும் நிறைந்து வாட்போர் செய்ய இதுவரை ஒரு சிலரே இருக்கிறார்கள் என்று ஏங்கியிருந்த ரசிகர்களின் உள்ளத்திலே உவகையூட்ட, எதிர்காலத்தில் தரணியிலே தன்னிகரில்லா வீரனாக விளங்க இப்படத்தின் மூலம் அறிமுகமான


## சி. எல். ஆனந்த்

தன் திறமையைக் காட்டி வெற்றிவாகை சூடிவிட்டார்.

ஆங்கில வீரர்களும் அதிசயம் அடையக் கூடியதாக அற்புதமாக வாட் போர் செய்து நடித்திருக்கிறார்

—ஆனந்த்





இதுவரை பார்த்திராத குதிரைச் சவாரி வீரனாகவும் காட்சி தருகிறார்.

## அற்புதம் - ஆச்சரியம்

என்று பார்த்தோர் கூறுகிறார்கள். பார்க்காதவர் இவைகளைப் பார்க்கத் துடியாய்த் துடிக்கிறார்கள்.

செவிக்கினிய கீதம், கண்ணுக்கினிய நடனம், திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்த படம்.
இதன் உண்மையை அறிய இன்றே சென்று பார்த்து மகிழுங்கள்.

**சி. எல். ஆனந்த்—அசோகன்**
**ராமதாஸ்—எஸ். ராமராவ்—ஹேமலதா**
**காமினி—சந்திரகாந்தா—சகுந்தலா**
**மாஸ்டர்கோபால்**
முதலியோர் நடித்த

## சிட்டாடல் பிலிம்ஸாரின்

# விஜயபுரி வீரன்

டைரக்ஷன்: **ஜோஸப் தளியத் Jr.** – தயாரிப்பு: **ஜோஸப் தாமஸ்** – சங்கீதம்: **டி. ஆர். பாப்பா**

பின்னணி:

ஏ. எம். ராஜா—ஜிக்கி—பி. சுசீலா—ஏ. பி. கோமளா—எஸ். வி. கிருஷ்ணன்—எஸ். ஜானகி
டி. வி. ரத்தினம்—டி. எல். ராஜேஸ்வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை, ... இல் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டார நாயக்க மாவத்த சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 நவ. 20-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.